வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 01 | 10.06.2021 வியாழக்கிழமை | இதழ் : 189 | பக்கங்கள் : 16

# பயண தடைக்கு மத்தியிலும் நாட்டில் கொரோனா தொற்று, மரணம் உயர்வு!



## நிலைமைகளை அவதானித்தே முடிவு என்கிறார் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே

கொழும்பு, ஜூன் 10

கடந்த வாரத்தை விட இந்த வாரம் கொரோனா தொற்று மற்றும் மரணங்கள் அதிகரித்துள்ள நிலையில் பயணத்தடையை நீடிப்பதா இல்லையா என்பது குறித்து நிலைமைகளை அவதானித்தே முடிவு செய்யப்படும் என இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

15

## எதிர்ப்பு போராட்டங்களின் மத்தியில் 20 தமிழரை நாடு கடத்தியது ஜேர்மனி!



பிராங்போர்ட், ஜூன் 10

ஜேர்மனி, பிராங்போர்ட் விமான நிலையத்தில் தமிழர்கள் உட்பட பெருந்தொகையானவர்கள் முன்னெடுத்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்துக்கு மத்தியில் சுமார் 20 தமிழர்கள் நேற்றிரவு பலவந்தமாக தனி விமானம் ஒன்றில் ஏற்றப்பட்டு இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டுள்ளார்கள்.

அரசியல் தஞ்சக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டவர்களே இவ்வாறு நாடுகடத்தப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. நாடு கடத்தப்படுவதற்காக

15

## 25 சிறுவர்கள் உட்பட நேற்று வடக்கில் 143 தொற்றாளர்கள்!

### யாழ்ப்பாணத்தில் 107 பேர்

யாழ்ப்பாணம், ஜூன் 10

வடக்கில் நேற்று 25 சிறுவர்கள் உட்பட 143 பேர் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர். இதில், 18 சிறுவர்கள் உட்பட 108 பேர் யாழ். மாவட்டத்தை சேர்ந்தவர்களாவர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை ஆய்வுகூடத்

15

## முழுநேர பயணக்கட்டுப்பாட்டை கடுமையாக அமுல்படுத்துங்கள்

### ஜனாதிபதிக்கு விசேட மருத்துவ நிபுணர்கள் சங்கம் கடிதம்

கொழும்பு, ஜூன் 10

இலங்கையில் தற்போது அமுலில் உள்ள முழுநேரப் பயணக் கட்டுப்பாட்டை கடுமையாக அமுல்படுத்துமாறு விசேட மருத்துவ நிபுணர்களின் சங்கம், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

15

## 2,735 பேருக்கு கொரோனா

கொழும்பு, ஜூன் 10

நாட்டில் நேற்று 2 ஆயிரத்து 735 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை இரண்டு இலட்சத்து 13 ஆயிரத்து 396 ஆக அதிகரித்துள்ளது.

கொரோனாவிலிருந்து குணமடைந்தவர்

15

## ஜூன் 22இல் சபையில் ரணில் எம்.பியாக சத்தியப்பிரமாணம்

கொழும்பு, ஜூன் 10

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்வரும் 22ஆம் திகதி சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன முன்னிலையில் பாராளுமன்ற உறுப்பினராகச் சத்தியப் பிரமாணம் செய்யவுள்ளார் என அறியமுடிகின்றது.

15

## கோவிட் நோயாளிகளை ஏற்றிவந்த பஸ் மோதியதில் விவசாயி மரணம்!

### மட்டுவிலில் பஸ்கள் மீது கற்கள் வீசப்பட்டதால் குழப்பம்



யாழ்ப்பாணம், ஜூன் 10

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்துக்கு அண்மையாக சைக்கிளில் பயணித்த ஒருவரை கோவிட்-19 நோய்த்தொற்றாளர்களை ஏற்றி வந்த பஸ் மோதியதில் அவர் உயிரிழந்தார்.

விவசாயி ஒருவரே

15

## மஸ்தான் எம்.பிக்கு கொரோனா!

வவுனியா, ஜூன் 10

வன்னி மாவட்ட ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தானுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகியுள்ளது.

கொழும்பில்

15

## மட்டுவில் சம்பவத்தின்போது இராணுவம் துப்பாக்கிச் சூடு!

### ஐந்து பேர் பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 10

மட்டுவில் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்துச் சம்பவத்தை அடுத்து இடம்பெற்ற வன்முறையை கட்டுப்படுத்த இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர் என சாவகச்சேரி பொலிஸார்

15



## இப்படியும் நடக்கிறது...!

நேற்று இந்தப் பத்தியில் முருகபூபதி எழுதிய வரலாற்று தொடரில் அவர் தெரிவித்திருந்த கருத்து ஒன்று பற்றி குறிப்பிட்டிருந்தேன்.

நண்பர் முருகபூபதி வேண்டுமென்றே தவறாக எழுதியிருப்பார் என்பது இந்த ஊர்க்குருவியின் நோக்கம் அல்ல என்பதையும் தெளிவுபடுத்தியிருந்தேன்.

அந்தப் பத்தியைப் படித்துவிட்டு அவுஸ்திரேலியாவிலிருந்து நண்பர் முருகபூபதி விளக்கமளித்து ஒரு மடல் அனுப்பியிருந்தார்.

அந்த மடலில் அவர் மீண்டும் தவறு செய்திருக்கிறார்.

அவரின் அந்த மடலில் அவர் தெரிவித்திருப்பவை:

“1984 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 31ஆம் திகதியன்று மதியம் யாழ்ப்பாணம் மல்லிகை இதழ் காரியாலயத்தில் நான் மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவாவுடன் பேசிக்கொண்டிருந்தபோது, நண்பர் ஏ. ஜே. கனகரட்ணா பதட்டத்துடன் ஓடிவந்து இந்திரா காந்தி கொல்லப்பட்டார் என்ற அதிர்ச்சியான செய்தியை சொன்னது உண்மை.

இதுபற்றி, ஏற்கனவே ஏ.ஜே. கனகரட்ணா மறைந்த வேளையில் நான் எழுதிய அஞ்சலிப் பதிவிலும் எழுதியிருக்கின்றேன்.

அவரும் ஒரு பத்திரிகையாளர், நானும் பத்திரிகையாளன். அந்தச்செய்தி உடனடியாக அப்போது ‘ஈழநாடு’வில் வெளிவரவில்லையே என்ற ஊடக அக்கறையுடன் வந்த பதட்டம் அவரது தொனியில் தென்பட்டிருக்கலாம்.

இந்திரா எந்தநேரம் கொல்லப்பட்டார் என்பது எமக்கு அப்போது தெரியாது. நான் வீரகேசரியில் தினமும் காணும் ரொய்ட்டர் - பி. ரி. ஐ. செய்திச்சேவை இயந்திரங்களை மனதில் வைத்துக்கொண்டு, அவ்வாறு ஈழநாடு அலுவலகத்திலும் இருந்திருக்கலாம் என்று நம்பிக் கொண்டுதான் கேட்டேன். அங்கிருந்த குறைந்த வளங்கள் குறித்த ஏ. ஜே. கனகரட்ணாவின் ஆதங்கமே, அத்தகைய உடனடி கோபத்திற்கு காரணமாகவும் இருந்திருக்கலாம்.”

இதுவே முருகபூபதியின் விளக்கம். முருகபூபதிக்கு என்ன நடந்தது என்பது தெரியவில்லை.

அவர் தனது வரலாற்றுப்பதிவில், இந்திரா கொல்லப்பட்ட செய்தியை ஏ.ஜே. கனகரட்ணா சொன்னபோது, தானே ஈழநாடுவில் வரவில்லையே என்று கேட்டாரென எழுதிய முருகபூபதி, இந்தப் பதிலில் கனகரட்ணா கேட்டாரெனவும், ஈழநாடுவிடம் இருந்த குறைந்த வளங்கள் குறித்த கனகரட்ணாவின் ஆதங்கமே அது என்றும் எழுதியிருக்கிறார்.

என்ன குழப்பம் என்று தெரியவில்லை.

அன்னை இந்திரா கொல்லப்பட்டபோது அவர் பாரதப் பிரதமராக இருந்தார். அவர் கொல்லப்பட்ட செய்தி உலகம் முழுவதும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. செய்தி வெளிவந்த உடனேயே யாழ்ப்பாண நகர் சோகத்தில் மூழ்கிவிட்டது. பஸ் நிலையத்தைச் சுற்றியிருந்த கடைகளில் எல்லாம் கறுப்புக்கொடிகள் ஏற்றப்பட்டு சோக கீதம் இசைக்கத் தொடங்கியிருந்தது.

ஈழநாடு நண்பகல் இரண்டு மணிக்கே விசேட பதிப்பை வெளியிட்டிருந்தது. இதுகுறித்தும் இந்தப் பத்தியில் ஒரு தடவை குறிப்பிட்டிருந்தேன்.

காலை எழும்பியதும் ஈழநாடுவைப் படிக்கின்ற ஏ. ஜே. கனகரட்ணா, எண்பதுகளின் ஆரம்பத்தில் ஈழநாடு ஆசிரிய பீடத்தில் ஓர் ஆலோசகராக பணியாற்றியவர். அவர் இந்திரா இறந்த செய்தியை வானொலியில் கேட்டுவிட்டுத்தான் வந்ததாரெனவும் முருகபூபதியே எழுதியுருக்கிறார். வானொலிச் செய்தியில் அவர் எப்போது சுடப்பட்டார் என்பதும் சொல்லப்பட்டிருக்கும்.

ஈழநாடுவில் வெளிவரவில்லையே என்பதும், அதனோடு செல்வநாயகம் இறந்த செய்தியை தினகரன் கோட்டைவிட்ட கதையும் முருகபூபதியின் கட்டுரைத் தொடரை ஜனரஞ்சகமாக படிக்க உதவியிருக்கும்.

அவ்வளவுதான்.

- ஊர்க்குருவி

# அஸ்ட்ரா செனேகா தடுப்பூசிகளை இலங்கைக்குப் பெற்றுத் தாருங்கள்

### உலக சுகாதார ஸ்தாபனத்திடம் வாசுதேவ வேண்டுகோள்

கொழும்பு, ஜூன் 10

இலங்கையில் அஸ்ட்ரா செனேகா கொரோனாத் தடுப்பூசி பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய உலக சுகாதார ஸ்தாபனமும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார வலியுறுத்தியுள்ளார்.



நாட்டில், அஸ்ட்ரா செனேகா கொரோனாத் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொண்ட 6 இலட்சம் பேர் இரண்டாவது டோஸைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் உள்ளனர் என்றும், இந்த விவகாரம் மனித உரிமைகள் மீறல் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் காணொளிப் பதிவொன்றை வெளியிட்டுள்ள அவர், இந்த விடயம் தொடர்பில் இரு அமைப்புகளும் ஒன்றிணைந்து முடிவைப் பெற்றுத்தர முன்வர வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள்ளார்.

உலகின் பணமும் பலமும் பொருந்திய நாடுகள் அதிகளவில் ‘அஸ்ட்ரா செனகா’ தடுப்பூசிகளை வைத்திருக்கின்றன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தடுப்பூசிகளை வைத்திருக்கும் தனியார் நிறுவனங்கள் அதிக விலைக்கு அவற்றை விற்பனை செய்ய முன்வந்துள்ள போதிலும் அந்தத் தடுப்பூசிகள் குறித்த உறுதிப்படுத்தல் இல்லாததன் காரணமாக அவற்றைக் கொள்வனவு செய்ய முடியாது எனவும் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார மேலும் தெரிவித்துள்ளார். (இ)



# வீடு புகுந்து திருடியவர் சுன்னாகத்தில் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 10

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மயிலணி பகுதியில் வீடு ஒன்றின் யன்னலை உடைத்து உட்புகுந்து, இரண்டரை பவுண் நகை மற்றும் ஒரு இலட்சம் ரூபாய் பணத்தைத் திருடிய சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டு உரிமையாளரின் முறைப்பாட்டின் அடிப்படையில் யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதன் அடிப்படையில் இந்தத் திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய நல்லூர் பகுதியைச் சேர்ந்த 24 வயது நபரை தாம் கைது செய்தனர் என்றும், அவரிடம் இருந்து திருடப்பட்ட நகை, பணம் என்பவற்றை மீட்டனர் என்றும் பொலிஸார் கூறினர். மேலதிக விசாரணைகளுக்காக குறித்த நபர் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ஐ-03)

## வாயில் வாளுடன் ‘ரிக்-ரொக்’ பதிவு: இளைஞர் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 10

வாயில் வாள் ஒன்றை வைத்துக் கொண்டு ‘ரிக் ரொக்’கில் (TikTok) காணொலி பதிவிட்ட இளைஞனை கோப்பாய் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

உரும்பிராய் சிவகுல வீதியைச் சேர்ந்த 22 வயது இளைஞனே இவ்வாறு நேற்றுக் கைது செய்யப்பட்டார் என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-3)

## சாவகச்சேரியில் மூதாட்டி மரணம்!

தென்மராட்சி, ஜூன் 10

கொரோனா தொற்றுக்கு இலக்கான மூதாட்டியொருவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்தார்.

சாவகச்சேரி, சங்கத்தானையை சேர்ந்த மூதாட்டியே இவ்வாறு உயிரிழந்தார். (ஐ)

# பல்கலைக்கழகத்துக்கான விண்ணப்ப திகதி நீடிப்பு!

கொழும்பு, ஜூன் 10

2020 - 2021ஆம் கல்வி ஆண்டுக்கான பல்கலைக்கழக நுழைவு அனுமதிக்கான விண்ணப்ப காலம் மேலும் ஒரு வாரத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே எதிர்வரும் 11ஆம் திகதி விண்ணப்ப முடிவு நாளாக அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், நாட்டின் நிலைமையை கருத்தில் கொண்டு விண்ணப்ப காலத்தை எதிர்வரும் 18ஆம் திகதி வரை நீடித்துள்ளதாக பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ஐ)

# யாழ்ப்பாணத்தில் இரத்ததானம்

யாழ்ப்பாணம், ஜூன் 10,

தேசிய இரத்த மத்திய நிலையத்தின் வேண்டுகோளுக்கு அமைய யாழ். மாவட்ட மின்னியலாளர்களின் ஏற்பாட்டில் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு மற்றும் யாழ். மாவட்ட லயன்ஸ் கழகம் ஆகியன இணைந்து இரத்ததான முகாமொன்றை யாழ். மாவட்டத்தில் நடத்தவுள்ளன.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் ஜூலை மாதம் முதலாம் திகதி காலை 8 மணி முதல் நடைபெறவுள்ளது.

எனவே, யாழ். மாவட்ட மக்கள் இந்தப் புனித உயிர் காக்கும் இரத்ததான நிகழ்வில் பங்குபற்றுமாறு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு மற்றும் யாழ் மாவட்ட லயன்ஸ் கழகம் ஆகியன இணைந்து அழைப்பு விடுத்துள்ளன.

தற்போது நாட்டில் நிலவும் பயணத்தடை காரணமாக இந்த இரத்ததான நிகழ்வில் கலந்துகொள்ள விரும்புவோர் இங்குள்ள தொலைபேசி இலக்கத்துடன் 077 039 9119 முன்கூட்டியே தொடர்பு கொள்ளும் பட்சத்தில் அதற்கான ஏற்பாடுகளை இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு மற்றும் யாழ் மாவட்ட லயன்ஸ் கழகம் ஆகியன மேற்கொள்ளும் என அதன் உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

ஈழநாடு
Eelanadu
10.06.2021 வியாழக்கிழமை
பிலவ வருடம், வைகாசி 27

“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# கடவுள்தான் காப்பாற்றவேண்டும்

ஒரு காலத்தில் இவ்வாறானதொரு கூற்றை, தமிழ் தலைவரான எஸ். ஜே. வி. செல்வநாயகம் குறிப்பிட்டிருந்தார். அரசியல் ரீதியில் மிகவும் இக்கட்டான நிலைமையை எதிர்கொண்டிருந்த சூழலில்தான், “இனி தமிழ் மக்களை கடவுள்தான் காப்பாற்றவேண்டும்” என்று அவர் குறிப்பிட்டிருந்தார். இன்று பல தசாப்தங்களுக்கு பின்னர், கொழும்பு அபயராம விகாரையின் விகாராதிபதி முத்தெட்டுவ ஆனந்த தேரர், ‘கடவுள்தான் நாட்டை காப்பாற்றவேண்டும்’ என்று குறிப்பிட்டிருக்கின்றார்.

முத்தெட்டுவ ஆனந்த தேரர், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வெற்றிக்காகப் பாடுபட்ட முக்கிய பிக்குகளில் ஒருவர். கடும்போக்கு சிங்கள தேசியவாதியான அவர், அண்மைக் காலமாக அரசாங்கம் தொடர்பில் அவ்வப்போது விமர்சனங்களை முன்வைத்து வருகின்றார். கொரோனா பெருந்தொற்றின் தாக்கம் மோசமடைந்து செல்லும் நிலையிலேயே இவ்வாறானதொரு கருத்தை அவர் முன்வைத்திருக்கின்றார்.

தேர்தல் காலத்தில் எங்களுடைய கருத்துக்கள் செவிமடுக்கப்பட்டன ஆனால், இப்போது அவ்வாறான நிலையில்லை. பல்வேறு மாற்றங்களை சுட்டிக்காட்டினோம். ஆனால், எவரும் பொருட்படுத்தவில்லை. இவ்வாறு குறிப்பிட்டிருக்கும் தேரர், அனைத்து தரப்பினரின் யோசனைகளையும் உள்வாங்கி, சிறந்த ஒரு பொறிமுறையை உருவாக்கவேண்டும். ஆனால், எங்களுடைய கருத்துக்களுக்கு மதிப்பளிக்கப்படவில்லை. அதன் காரணமாகவே இன்று நிலைமைகள் மோசமடைந்திருக்கின்றன என்று தெரிவித்திருக்கிறார்.

கொரோனா பெருந்தொற்றின் தாக்கம் அதிகரித்துச் செல்கின்றது. முக்கியமாக, உயிரிழப்புக்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்துச் செல்கின்றது. பயணத் தடையாலும் எவ்வித முன்னேற்றங்களும் ஏற்படவில்லை. இவ்வாறான பின்னணியிலேயே, அரசாங்கத்தின் மீதான விமர்சனங்களும் அதிகரிக்கின்றன. எதிரணியினர் இதுபற்றி கூறுவதை அரசியல் போட்டியென்று கூறி இலகுவாக ஒதுக்கி விடலாம் ஆனால், முத்தெட்டுவ தேரர் போன்றவர்களின் கருத்துக்களை அவ்வாறு ஒதுக்கிவிட முடியாது. ஏனெனில், இந்த அரசாங்கத்தை பெரும்பான்மை சிங்கள மக்களின் ஆதரவுடன் ஆட்சியில் அமர்த்தியதில் முத்தேட்டு ஆனந்த தேரர் போன்றவர்களுக்கு முக்கிய பங்குண்டு.

சிங்கள - பௌத்த தேசியவாத அரசியலை பொறுத்தவரையில் பௌத்த மதபீடங்களே முதன்மையானவை. எவர் ஆட்சிக்கு வர வேண்டுமென்றாலும் அவர்களின் ஆதரவை பெறுவது கட்டாயமான ஒன்றாக இருக்கின்றது. சிங்கள - பௌத்த மதபீடங்களை பொறுத்தவரையில், ஒவ்வொரு குறிப்பிட்ட சூழலிலும் சிலரை தலைமைக்கு கொண்டு வருவதற்கு ஆதரவு வழங்குகின்றனர். ஆனால், தாங்கள் ஆட்சியில் அமர்த்தியவர்களால் பயனில்லை என்று எண்ணுகின்றபோது, புதியதோர் ஆட்சியை கொண்டுவருவதற்கு உதவுகின்றனர். இதில் எவர்மீதும் தனிப்பட்ட பற்று இந்த மதபீடங்களுக்கு இருப்பதாக தெரியவில்லை.

சிங்கள - பௌத்த மதபீடங்களின் இலக்கு ஒன்றுதான். அதாவது, எந்தவொரு சூழலிலும் சிங்கள - பௌத்த மேலாதிக்கத்திற்கு ஆபத்து வந்துவிடக்கூடாது. அவ்வாறு ஆபத்து நேர்ந்தால், அதன் பின்னர் தாங்கள் இலங்கையில் ஓர் அதிகார தரப்பாக இருக்க முடியாது. ஏனெனில், தற்போது பௌத்த மதபீடங்கள், அதில் அங்கம் வகிக்கும் பிக்குகள் அனுபவிக்கும் அதிகாரம், உலகில் வேறு எந்தவொரு நாட்டிலும் மதத் தலைவர்கள் அனுபவிக்காத அதிகார நிலையாகும்.

ஆனால், முதலில் நாடு சீராக இருந்தால்தான் பௌத்தத்தின் மேலாதிக்கத்தையும் சீராக வைத்திருக்கமுடியும். நாடு ஆபத்திற்குள் வீழ்ந்தால், நிலைமை மோசமடைந்துவிடும். இன்றைய நிலைமை தொடர்பில் தேரர்கள் அச்சமடைகின்றனர். இந்த அச்சத்தின் வெளிப்பாடே, அவ்வப்போது அரசாங்கத்தின்மீதான விமர்சனங்களாக வெளிப்படுகின்றன.

# நல்லிணக்கம் பற்றி பேசும் வெளிவிவகார அமைச்சர்!

- அலசுவது இராஜதந்திரி -



இலங்கைக்கான அமெரிக்க துணைத் தூதுவர் மார்ட்டின் ரிகெலியை தமது அலுவலகத்துக்கு அழைத்த வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன, அமெரிக்க காங்கிரஸ் செனட்டர்கள் இலங்கையின் வடக்கு-கிழக்கு தமிழர்களின் தாயகக் கோட்பாட்டை ஆதரித்தது தொடர்பாக தமது கண்டனத்தை வெளிட்டுள்ளார். தமது கண்டனத்தை வெளியிட்டபோது அமைச்சர் தினேஷ் குணவர்த்தன, அமெரிக்க செனட்டர்கள் தமது நாட்டின் அரசிடம் வடக்கு-கிழக்கு தமிழர்களின் தாயகக் கோட்பாட்டை அங்கீகரிக்குமாறு கோரியிருப்பது இலங்கையின் நல்லிணக்க முயற்சிகளைப் பாதித்துவிடும் என்றுகுறிப்பிட்டிருந்தார்.

அமைச்சர் குணவர்த்தன வேண்டுமானால், அமெரிக்க துணைத்தூதுவரிடம் தமது கண்டனத்தை தெரிவித்ததோடு நின்றிருக்கலாம். ஆனால், அமெரிக்க காங்கிரஸ் செனட்டர்கள் கூறியிருப்பது நல்லிணக்கத்தை பாதிக்கும் என்று தெரிவித்துள்ளதே வேடிக்கையானதாக இருக்கின்றது.

2009ஆம் ஆண்டு மே மாதம் வடக்கு-கிழக்கு யுத்தம் முடிவடைந்ததையடுத்து நல்லிணக்கம், புரிந்துணர்வு என்ற வார்த்தை பிரயோகங்களே ஓங்கி ஒலித்தவண்ணமிருந்தன. இந்த வார்த்தை பிரயோகங்கள் குறித்து வடக்கு-கிழக்கு மக்கள் மட்டுமல்ல. சர்வதேச சமூகமும் நிறையவே எதிர்பார்ப்பைக் கொண்டிருந்தது.

**ஏமாற்றம் தரும் நடவடிக்கைகள்**

ஆனால், யுத்தம் முடிவுற்று பன்னிரெண்டு வருடங்களாகியுள்ளபோதிலும் இதுவரை நல்லிணக்கத்துக்கு பதிலாக ‘பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்தது’போன்ற நடவடிக்கைகளே முனைப்படைந்துள்ளன.

வடக்கு-கிழக்கு யுத்தம் முடிவுற்றதன் பின்னர் கடந்த பன்னிரெண்டு வருட காலங்களில் ஜனாதிபதி தேர்தல்கள், பாராளுமன்ற தேர்தல்கள் என்பவை நடத்தப்பட்டிருந்தன. அத்தேர்தல் விஞ்ஞாபனங்களில்கூட நல்லிணக்கம் பற்றியெல்லாம் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது. தமிழ் தேசிய கூட்டமைப்புகூட தனது தேர்தல் விஞ்ஞாபனங்களில் நல்லிணக்கத்துக்கு ஏதுவான விடயங்களையும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை உட்பட, மனிதாபிமானப் பிரச்னைகள் பலவற்றுக்கு தீர்வு காண்பது பற்றியெல்லாம் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டிருந்தது.

ஆனால், தேர்தல் விஞ்ஞாபனங்களில் மட்டுமல்ல. யுத்தம் முடிவுற்றதையடுத்து நாட்டு நிலைமைபற்றி அறிவதற்கு இலங்கை வந்திருந்த வெளிநாட்டு இராஜதந்திரிகளிடம்கூட நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது குறித்துஅரசதரப்பு வாக்குறுதிகளை வழங்கியிருந்தது.

இருந்தபோதிலும் இன்றுவரைகொடுத்த வாக்குறுதிகளில் ஒன்றையாவது நிறைவேற்றாதிருப்தையே காணமுடிகின்றது. இரு தினங்களுக்கு முன்னர் காணாமல்போன தனது மகனை கடந்த பன்னிரெண்டு வருடங்களாக தேடி எவ்வித பயனும் கிடைக்காத வேதனையில் தாய் ஒருவர் உயிரிழந்தார். இந்த அம்மையார் மட்டுமல்ல. மேலும் பலர்கூட தமது உறவுகளைத் தேடி ஏமாற்றமுற்ற நிலையில் உயிரிழந்தனர்.

இவையாவற்றுக்கும் மேலாக வடக்கு-கிழக்கு மக்களுக்கு ‘டிமிக்கி’ கொடுத்த 2015ஆம் ஆண்டில் பதவிக்குவந்த நல்லாட்சி அரசாங்கம் இலங்கையில் ஆட்சியமைத்த எந்தவோர்அரசியல் கட்சியும் வழங்காத விதத்தில் நல்லிணக்கம் குறித்து வாக்குறுதிகளை வழங்கி, பின்னர் வடக்கு-கிழக்கு மக்களை பெரிதும் ஏமாற்றிவிட்டிருந்தது.

**ஏமாற்று வித்தைகள்**

இத்தகைய ‘ஏமாற்று வித்தைகளை’ நன்கு அறிந்துகொண்ட நிலையிலேயே அமெரிக்க காங்கிரஸ் செனட்டர்கள் வடக்கு-கிழக்கு தமிழர்களின் தாயகக்கோட்பாடுபற்றி பிரஸ்தாபித்துள்ளனர்.

இது தவிர, யுத்தம் முடிவுற்ற காலத்திலிருந்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவைகூட இலங்கையில் மனித உரிமைகள் சம்பந்தப்பட்டவற்றை முன்னேற்றமடைய வைத்து, நல்லிணக்கத்தை விரைந்து ஏற்படுத்தும் விதத்தில் பிரேரணைகளை கொண்டுவந்தது.

ஆனால், இலங்கையில் யுத்தத்துக்குப் பின்னரான நடவடிக்கைகள் முன்னேற்றம் காணப்படாத நிலையில், சர்வதேச சமூகம் வழங்கிய ஒத்தாசைகளையும் தட்டிக்கழித்த நிலையிலேயே அமெரிக்க காங்கிரஸ் செனட்டர்கள் வடக்கு-கிழக்கு தமிழர்களின் தாயகக் கோட்பாடுபற்றி தமது கரிசனையை வெளிப்படுத்தியுள்ளனர்.

அமெரிக்க செனட்டர்களின் வடக்கு-கிழக்கு தாயகக் கோட்பாடுகுறித்து வெளிவிவகாரஅமைச்சர் தினேஷ் குணவர்த்தன தனது கண்டனத்தை வெளியீட்டுள்ளார். ஆனால், உலகில் ஒரு வல்லரசாகவும், அதேசமயம் ஜனநாயக ரீதியாக முன்னணி நாடாகவும் இருக்கும் அமெரிக்காவை பின்பற்றி, இலங்கை இனப்பிரச்னையோடு சம்பந்தப்பட்ட ஏனைய நாடுகள்கூட அமெரிக்க செனட்டர்களை பின்பற்றி இலங்கையின் வடக்கு-கிழக்கு தமிழர்களின் தாயகக் கோட்பாட்டை ஆதரித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்றே குறிப்பிடலாம்.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஜுன் - 10 வியாழக்கிழமை
பிலவ வருடம் - வைகாசி 27
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 1.30 - 3.00
திதி : அமாவாசை




**மேடம்**
கூடுதல் முயற்சி எடுப்பதால் வெற்றி வாய்ப்பு அதிகரிக்கும். புதிதாக அறிமுகமாகும் நபர்களிடம் அதிக நெருக்கம் வேண்டாம். பொதுநல சேவைகள் செய்து பாராட்டுப் பெறுவீர்கள்.

**இடபம்**
நண்பர்களுக்கு உதவி செய்து நிம்மதி ஏற்படுத்துவீர்கள். புதியவர்களிடம் அளவுக்கு அதிக நட்பைத் தவிர்க்க வேண்டும். எதிர்பாலினத்தைச் சேர்ந்த ஒருவரால் உதவி கிடைக்கும்.

**மிதுனம்**
உங்களுக்கு கீழே பணிபுரிபவர்களால் வந்த சிரமம் விலகும். குடும்பத்திற்காக சிறு சிறு செலவுகளை செய்து மகிழ்வீர்கள். நல்ல செய்தி வரும். செய்யும் பணி சிறப்படையும்.

**கடகம்**
கவுரவம் அதிகரிக்கும்படியான செயல் ஒன்றைச் செய்வீர்கள். பாராட்டுக்களை பற்றி அதிக பெருமிதம் கொள்ள வேண்டாம். தந்தை நலனில் கவனம் செலுத்த வேண்டியிருக்கும்.

**சிம்மம்**
பணியாளர்களுக்கு வேலையில் இருந்த பளு சற்றுக் குறையும். அகங்காரம் தலை தூக்காமல் பார்த்துக் கொள்வது நல்லது. கிடைத்த வாய்ப்பை தவறவிடாமல் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

**கன்னி**
வேலை தேடுபவர்களுக்கு நற்செய்தி ஒன்று தேடிவரும். பொறுப்பான பணியில் இருப்பவர்கள் பயணம் செல்ல நேரிடலாம். திருப்தியுடன் செயலாற்றுவதால் சாதகமான பலன் கிடைக்கும்.

**துலாம்**
மனதிற்குப் பிடித்தவர்களை சந்திப்பீர்கள். அதிர்ஷ்டம் கூடும். நன்கு பணி செய்து மேலதிகாரியின் பாராட்டைப் பெறுவீர்கள். எதிர்விளைவுகளை யோசித்து கவனமாக பேசுவது நல்லது.

**விருட்சிகம்**
செயல்பாடுகளிலும் பணியிலும் அதிக கவனம் தேவை. புதிய நண்பர்களிடம் எச்சரிக்கையாகப் பழகுவது நல்லது. புதிய திட்டத்தில் மாறுதல்கள் செய்து வெற்றி பெறுவீர்கள்.

**தனுசு**
ரகசியங்களை கையாளுவதில் கவனம் தேவை. சாதனை புரிவீர்கள். சவால்களை முடிப்பீர்கள். சிறு வெற்றி ஒன்று கிடைக்கக்கூடும். உங்களின் திட்டம் சிறு திருப்பத்துக்குப் பிறகு நிறைவேறும்.

**மகரம்**
குடும்பத்தில் தேவையற்ற பிரச்னைகள் உருவாக விடாதீர்கள். எதிர்பார்த்த உதவி கிடைப்பதில் தாமதம் ஏற்படும். மேலதிகாரியின் உத்தரவை மீற முயற்சிக்க வேண்டாம்.

**கும்பம்**
நட்பில் கருத்து வேற்றுமை ஏற்பட்டாலும் சரியாகிவிடும். அலுவலகப் பணியாளர்களுக்கு தேவையற்ற கவலை இருக்கும். ஈடுபாடு காரணமாகத் தடை தாண்டி முயற்சி செல்லும்.

**மீனம்**
புதிய செலவுகள் உண்டாகலாம். விரும்பிய மாற்றம் வரும். வெளிச்சமான சூழ்நிலை உருவாகி மனம் மகிழும். மன நிறைவுக்காகக் கூடுதல் செலவு செய்ய வேண்டி இருக்கலாம்.

# அ.தி.மு.கவில் எந்த சலசலப்பும் இல்லை ஆக்கபூர்வமாக செயல்படுகின்றோம்

## முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் சொல்கிறார்

சென்னை, ஜூன் 10

"அ.தி.மு.கவில் எந்தவித சலசலப்பும் இல்லை. ஆக்கபூர்வமான எதிர்கட்சியாக அ.தி.மு.க. செயல்படுகின்றது" என அ.தி.மு.கவின் முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் நேற்று ஊடகவியலாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு சட்டமன்ற எதிர்கட்சியான அதிமுகவின் எம்.எல்.ஏக்கள் கூட்டத்தை வரும் ஜூன் 14 ஆம் திகதி நடத்த அனுமதி கேட்டு சென்னையில் உள்ள டி.ஜி.பி. அலுவலகத்தில் முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் உள்ளிட்ட அ.தி.மு.கவினர் நேற்று மனு அளித்துள்ளனர்.



இதன் பின்னர் செய்தியாளர்களை சந்தித்து பேசிய ஜெயக்குமார், "அ.தி.மு.க. தலைமை அலுவலகத்தில் வரும் 14ஆம் திகதி பகல் 12 மணிக்கு கூட்டம் அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க் கள் கூட்டம் நடைபெறும். கூட்டம் நடத்த அனுமதி கோரி காவல்துறையிடம் மனு கொடுக்கப்பட்டுள்ளது" என்று தெரிவித்தார்.

இதனை தொடர்ந்து சசிகலா பேசியதாக வெளியான ஒலிப்பதிவு குறித்து செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அவர், சசிகலாவிற்கும் அ.தி.மு.கவிற்கு எந்த சம்பந்தமும் இல்லை என்பதை எதிர்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி தெளிவாக கூறியிருக்கிறார் என்று சுட்டிக் காட்டினார்.

மேலும் அ.தி.மு.கவில் எந்தவித சலசலப்பும் இல்லை என்றும் ஆக்கபூர்வமான எதிர்கட்சியாக அ.தி.மு.க. தொடர்ந்து செயல்படும் என்றும் முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் கூறியுள்ளார்.

# மாநில, மத்திய அரசுகளுக்கு இடையேயான உறவில் விரிசல் ஏற்படுத்த விரும்பவில்லை

## அமைச்சர் மா.சுப்பிரமணியன்

சென்னை, ஜூன் 10

குற்றச்சாட்டுகளை பெரிதுபடுத்தி மாநில, மத்திய அரசுக்கு இடையேயான உறவில் விரிசல் ஏற்படுத்திக்கொள்ள விரும்பவில்லை என தமிழக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.



நிருபர்களுக்கு பேட்டியளித்த அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறியதாவது:-

"முழு ஊரடங்கு பெரிய அளவில் வெற்றியடைந்துள்ளது. தொற்றின் அளவு சரி பாதியாக குறைந்துள்ளது நம்பிக்கையை தருகிறது. கொரோனா தொற்றால்பாதிக்கப்பட்டவர்களைவிட குணமடைந்து வருபவர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது.

கிராம மக்கள் மத்தியில் தடுப்பூசிக்கு பெரிய வரவேற்பு உள்ளது. கடந்த ஆண்டு அனைத்து கடைகளும் மூடப் பட்டது, மதுக்கடைகள் மட்டும் திறந் திருந்தது. இந்தாண்டு அத்தியாவசிய கடைகள் திறக்கப்பட்டும் மதுக்கடை கள் திறக்கப்படவில்லை.

இதுவரை கறுப்பு பூஞ்சை நோயினால் 1,502 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். கறுப்பு பூஞ்சை குறித்து தமிழக மக்கள் அச்சம் கொள்ள வேண்டாம். மருத்துவமனைகளில் சிறப்பு நோயாளர் விடுதியில் அமைக்கப்பட்டுள்ளது.

குற்றச்சாட்டுகளை பெரிதுபடுத்தி மாநில, மத்திய அரசுக்கு இடையேயான உறவில் விரிசல் ஏற்படுத்திக்கொள்ள விரும்பவில்லை. பேரிடர் காலத்தில் நோய் தொற்றை குறைக்கவே கவனம் செலுத்துகிறோம்" என்று தெரிவித்தார்.

# பிரபல திரைப்பட இயக்குநர் சொர்ணம் சென்னையில் நேற்று காலமானார்

## முதலமைச்சர் ஸ்டாலின் நேரில் சென்று அஞ்சலி

சென்னை, ஜூன் 10

பிரபல திரைப்பட இயக்குநர் சொர்ணம் நேற்று காலமானார். அவருக்கு வயது 88. வயது மூப்பு மற்றும் உடல்நலக் குறைவால் அவர் மரணமடைந்தாரென தெரிவிக்கப்படுகின்றது.

மரணம் அடைந்த சொர்ணம் மறைந்த முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி கதை எழுதிய 'ஒரே ரத்தம்' படத்தை இயக்கி பிரபலமானார். தற்போதைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அப்படத்தின் மூலம் தான் நடிகராக அறிமுகமானார்.

மேலும் சிவகுமார், கமல்ஹாசன் நடித்த தங்கத்திலே வைரம், முத்துராமன் நடித்த சீர்வரிசை, ஜெய்சங்கர் நடித்த ஆசை மனைவி, நீ ஒரு மகராணி போன்ற படங்களையும் இயக்கி உள்ளார் சொர்ணம்.

இதுதவிர, எம்.ஜி.ஆர். நடித்த தாயின் மடியில், நம்நாடு, கலங்கரை விளக்கம், குடியிருந்த கோயில், ஒளிவிளக்கு, என் அண்ணன், குமரி கோட்டம், இதயவீணை, ராமன் தேடிய சீதை, பட்டிக்காட்டு பொன்னையா உள்ளிட்ட 11 படங்களுக்கு வசனம் எழுதி உள்ளார்.

மறைந்த இயக்குனர் சொர்ணம் உடலுக்கு மு.க.ஸ்டாலின் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். சொர்ணத்தின் குடும்பத்தினருக்கு மு.க.ஸ்டாலின் ஆறுதல் கூறினார்.



# இலங்கையில் நாளாந்தம் 38 கொரோனா மரணங்கள்

## முடிவுகளில் தாமதம் என்கிறது மருத்துவ அதிகாரிகள் சங்கம்

கொழும்பு, ஜூன் 10

இலங்கையில் நாளொன்றில் கிட்டத்தட்ட 38 பேர் கொரோனா வைரஸினால் உயிரிழக்கின்றனர் எனவும், ஆனால், முடிவுகள் வெளியிடுவதில் தாமதம் ஏற்படுகின்றது எனவும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயற்குழு உறுப்பினர் மருத்துவர் பிரசாத் கொலம்பகே தெரிவித்தார்.

தொற்று நோயியல் பிரிவினால் கடந்த மாதம் வெளியிடப்பட்ட நாளாந்த கொரோனா இறப்புகளின் அறிக்கையை ஆய்வு செய்ததாகவும் அவர் கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஒரே நாளில் கிட்டத்தட்ட 38 கொரோனா மரணங்கள் நிகழ்ந்ததாக வரைபடமொன்றின் ஊடாக பெற்றுக்கொள்ளப்பட்ட அறிக்கையின் மூலம் தெரியவந்தது. ஆயினும், தொற்று நோயியல் பிரிவிலிருந்து தாமதமாக புள்ளி விபரங்களை நாங்கள் பெற்றதால், கணிப்புகளை செய்வது மற்றும் இறுதி முடிவுகளுக்கு வருவது மிகவும்கடினம்.

கடந்த ஆறு அல்லது ஏழு நாட்களில் முந்தைய கொரோனா மரணங்கள் 30 இற்கும் மேற்பட்டதாக அறிக்கைகள் வழங்கப்பட்டன. ஆனால், அறிவிக்கப்பட்ட திகதியில் ஒன்று அல்லது இரண்டு மரணங்கள் மட்டுமே நிகழ்ந்தன.

இது தொற்று நோயியல் பிரிவில் இருந்து புள்ளிவிபரங்களை வெளியிடுவதில் உள்ள தவறான தன்மையைக் காட்டுவது மாத்திரமல்லாது, புள்ளி விபரங்களும் வழக்கற்றுப் போய்விட்டன.

இதனிடையே, கடந்த சில நாட்களில் கொரோனா வைரஸினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையைக் கருத்தில்கொள்ளும்போது, மேல் மாகாணத்தின் களுத்துறை மாவட்டத்தில் தான் அதிக எண்ணிக்கையிலான மரணங்கள் பதிவாகியுள்ளன. அந்த மரணங்களில் 28 சதவீதம் வீடுகளில் பதிவாகியுள்ளன. இது அபாயகரமான நிலைமையாகப் பார்க்கப்படுகின்றது. இதில் கொழும்பு மாவட்டத்தில் வீடுகளில் ஏற்பட்ட மரணங்களின் சதவீதம் 18சதவீதமாகும்.

கடந்த மே மாதத்தில் 793 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன. அந்த மரணங்களில் 123 மரணங்கள் களுத்துறையில் இடம்பெற்றுள்ளன. கொழும்பில் 99 மரணங்கள், காலியில் 96 மரணங்கள், கம்பஹாவில் 81 மரணங்கள் என அதிகபட்ச மரணங்கள் பதிவாகியுள்ளன- என்றார். (இ)

# கொரோனாவுக்கு முடிவுகட்ட சகலரும் ஒத்துழையுங்கள்!

## மக்களை கேட்கிறார் யாழ். அரச அதிபர்

**யாழ்ப்பாணம், ஜூன் 10**

**யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்க அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று மாவட்ட அரச அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் கேட்டுள்ளார்.**

நாடு முழுவதிலும் பயணத் தடை அமுலில் உள்ள நிலையில் யாழ். மாவட்டத்தில் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்னைகள் மற்றும் விவசாய விளைப்பொருட்களைச் சந்தைப்படுத்தல் தொடர்பில் நேற்று முக்கிய கூட்டம் நடைபெற்றது. யாழ். மாவட்ட அரச அதிபர் தலைமையில் மாவட்ட செயலகத்தில் இந்தக் கூட்டம் இடம்பெற்றது. இதன்பின்னர் யாழப்பாணத்தின் நிலைமை தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதேவேளை, மேற்படி கூட்டத்தில் பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டன என்று மாவட்ட அரச அதிபர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை யாவன:-

"யாழ். மாவட்ட விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களில் விற்பனை செய்யப்பட்டு எஞ்சியுள்ள விவசாய உற்பத்திப் பொருட்களை மாகாணத்துக்கு வெளியே அல்லது வடக்கு மாகாணத்துக்குட்பட்ட மாவட்டங்களில் உள்ள மொத்த வியாபாரிகளுக்கு எவ்வாறு சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தல் அல்லது மொத்த வியாபாரிகளிடம் எவ்வாறு அதனைச் சேர்ப்பித்தல் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.

விவசாய உற்பத்திப் பொருட்களை அதிக அளவில் கொண்டுள்ள விவசாயிகளை எவ்வாறு மொத்த வியாபாரிகளுடன் இணைப்பது தொடர்பில் பொறிமுறை ஒன்றை உருவாக்குவது குறித்து ஆராயப்பட்டது.

ஜனாதிபதியின் 'நஞ்சற்ற விவசாயத்தை ஊக்குவிப்போம்' என்ற எண்ணக் கருவுக்கு அமைய சேதனப் பசளை மூலம் மாவட்டத்தில் விவசாய உற்பத்தியை எவ்வாறு மேம்படுத்துவது மற்றும் சேதனப் பசளை உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கக் கையாள வேண்டிய உத்திகள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டன.

இந்தக் கூட்டத்தின்போது ஆராயப்பட்ட விடயங்கள் தொடர்பில் தகவல்களைப் பெற விரும்பும் விவசாயிகள் வடக்கு மாகாண விவசாய உதவிப் பணிப்பாளருடன் தொடர்புகொண்டு அதனைப் பெற்றுக்கொள்ள முடியும் எனக் குறித்த கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது" - என்றார்.

மேற்படி கூட்டத்தில் யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர், மாவட்ட விவசாயப் பணிப்பாளர், மாகாண உதவி விவசாயப் பணிப்பாளர் ஆகியோர் கலந்துகொண்டு விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்னைகள் தொடர்பில் விரிவாக ஆராய்ந்தனர். (இ - 03)

# ஓய்வுபெற்ற தாதியர்கள் தேவைக்கேற்ப ஒப்பந்த அடிப்படையில் மீள சேவையில்

## சுகாதார அமைச்சருக்குப் பிரதமர் ஆலோசனை

கொழும்பு, ஜூன் 10

ஓய்வுபெற்ற தாதியர்களைத் தேவைக்கேற்ப ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் சேவையில் இணைத்துக்கொள்ளுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அலரி மாளிகையில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலின்போதே சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சிக்கு பிரதமர் இந்த ஆலோசனையை வழங்கினார்.

நாடளாவிய ரீதியில் சுமார் 34 ஆயிரம் தாதியர்கள் முகங்கொடுத்துள்ள பிரச்னைகளுக்குக் குறுகிய மற்றும் நீண்டகால தீர்வுகள் குறித்து இந்தக் கலந்துரையாடலின் போது கவனம் செலுத்தப்பட்டது.

தாதியர்களின் சேவைக் காலத்தை நீடிப்பது குறித்து பிரதமர் கேள்வி எழுப்பியதையடுத்து சேவைக் காலத்தை 63 வயது வரை நீடிப்பது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது எனச் சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ்.எச்.முனசிங்க தெரிவித்தார்.

தாதியர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள் மற்றும் வசதிகளை மேம்படுத்துவது தொடர்பில் முருத்தெட்டுவே ஆனந்த தேரர் கருத்து தெரிவித்தார்.



கொத்தலாவலை பாதுகாப்பு பல்கலைக்கழகம் மற்றும் நெவில் பெர்னாண்டோ வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவுக்குப் பயிற்சி பெறாத தாதியர்கள் இணைத்துக் கொள்ளப்படுகின்றமை குறித்தும் அவர் இதன்போது சுட்டிக் காட்டினார்.

அதன்படி தற்போது அப்பிரிவுகளில் சேவையாற்றும் பயிற்சி பெறாத தாதியர்களை குறித்த பிரிவுகளில் சேவையாற்றும் காலத்தை பயிற்சிக் காலத்துடன் சேர்க்குமாறு பிரதமர் ஆலோசனை வழங்கினார்.

சுகாதாரத்துறையைச் சேர்ந்த அனைவருக்கும் கொரோனாத் தடுப்பூசி பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதுடன், அவர்களது குடும்ப உறுப்பினருக்கு இரண்டாவது டோஸ் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனவும் சுகாதார அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்.

பயணத் தடை விதிக்கப்பட்டுள்ள காலப்பகுதியில் தாதியர்களுக்கான போக்குவரத்து வசதிகளைப் பெற்றுக் கொடுக்க முறையான செயல்பாடொன்றை வகுக்குமாறும் பிரதமர் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

அத்தோடு தாதியர் பட்டத்தைப் பெற்றுக்கொடுக்கும் செயல்பாட்டைத் துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் பிரதமர், சுகாதார அமைச்சரை இதன்போது வலியுறுத்தினார்.

கொரோனாத் தொற்று நிலைமைக்கு மத்தியில் சுகாதார சேவையில் ஈடுபடும் அனைவரும் இதுவரை சிறப்பாக சேவையாற்றி வருகின்றனர் எனவும் பிரதமர் இதன்போது மேலும் தெரிவித்தார். (இ)

# காரைநகரில் கசிப்பு உற்பத்தி பொலிஸாரால் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ்., காரைநகர் பகுதியில் வீடொன்றில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

காரைநகர் ஊரி பகுதியில் உள்ள வீடொன்றில் கசிப்பு உற்பத்தி நடைபெறுகின்றது என அப்பகுதி கிராம சேவையாளருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் குறித்த வீடு முற்றுகையிடப்பட்டது.

இதன்போது வீட்டின் அறை ஒன்றினுள் கசிப்பு உற்பத்தி இடம்பெற்றதைக் கண்டறிந்து, வீட்டில் இருந்தவரை ஊர்காவற்துறைப் பொலிஸார் கைதுசெய்தனர்.

அத்துடன் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்பட்ட பொருட்களும் மீட்கப்பட்டன.



சம்பவம் தொடர்பில் ஊர்காவற்துறைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (இ - 03)

# காட்டு யானை தாக்கி குடும்பஸ்தர் மரணம்

மட்டக்களப்பு, ஜூன் 10

மட்டக்களப்பு மாவட்டத்தின் கரடியனாறு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கித்துள் பகுதியில் காட்டு யானை தாக்கியதில் ஒருவர் உயிரிழந்தார்.

கித்துள் வயல் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 53 வயதுடைய பொன்னுத்துரை கௌகிகன் என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தனர்.

நேற்றுமுன்தினம் மாலை வீட்டிலிருந்து இருந்து வயல் காவலுக்காக கித்துள் வயல் பகுதிக்குச் சென்ற வேளையே அவர் இவ்வாறு உயிரிழந்தார்.

நேற்றுக் காலை மீட்கப்பட்ட அவரது சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக கரடியனாறு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(இ)

# 10 நாள்களில் 19 ஆமைகள் உயிரிழந்த நிலையில் கரையொதுங்கியுள்ளன

### பிளாஸ்ரிக் துகள்கள் காரணமாக இருக்காலம் என நிபுணர்கள்கருத்து



கொழும்பு, ஜூன், 10

இலங்கையின் கடற் கரைகளில் ஆமைகள் உயி ரிழந்த நிலையில் கரை யொதுங்குவதற்கு பிளாஸ் ரிக் துகள்கள் காரணமாக யிருக்கலாம் என தெரிவித் துள்ள நிபுணர்கள் எக்ஸ் பிரஸ் கப்பலில் இருந்து கசிந்த இரசாயனங்களும் இதற்கு காரணமாகயிருக் கலாம் எனவும் தெரிவித் துள்ளனர்.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலின் கொள்கலனில் எவ்வளவு காணப்பட்டது என்பது குறித்து நிபுணர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். சூழல் பாதுகாப்பு அதிகாரசபை இது வரை 600 தொன் மாசடைந்த பிளாஸ்ரிக்குகளை சேகரித்துள் ளதாக தெரிவித்துள்ளது.

கடந்த பத்து நாட்களில் 19 ஆமைகள் இறந்த நிலையில் கரையொதுங்கியுள்ளதை தொடர்ந்து இலங்கை கட லிற்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து ஆழ்ந்த கவலை வெளி யாகியுள்ளது.

இலங்கையின் மிகமோச மான கடல்சார் பேரழிவிற்காக பொறுப்பான பதவிகளில் உள்ளவர்களையும் அமைப்பு களையும் தண்டிக்கவேண்டும் என உள்ளூர் மீனவ அமைப் பின் தலைவரான சட்டத்தரணி கமல் ஜயந்த டி சொய்சா தெரிவித்துள்ளார். இலங்கை ஐந்து வகையான கடல் ஆமை களின் வாழ்விடமாக காணப் படுகின்றது. எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் அனர்த்தம் காரணமாக இவற்றுக்கு அச்சுறுத்தல் உரு வாகியுள்ளது.

# பிரியா - நடேஸ் குடும்பத்தை அமெரிக்காவில் அல்லது நியூசிலாந்தில் குடியமர்த்த திட்டம்!

### 3 வருட கிறிஸ்மஸ் தீவு முகாம் வாழ்க்கை முடிவுக்கு வருமா?

சிட்னி, ஜூன் 10

அவுஸ்திரேலியாவில் புகலி டக்கோரிக்கை நிராகரிக்கப் பட்ட நிலையில் கிறிஸ்மஸ் தீவு அகதிகள் முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பிரியா - நடேஸ் குடும்பம் நியூசிலாந்து அல்லது அமெரிக்காவில் குடியமர்த்தப்படக்கூடும் என தெரிவிக்கப்படுகிறது.

குறித்த குடும்பத்தை எங்கே குடியமர்த்துவது என்பது தொடர்பில் உள்துறை அமைச் சர் கரன் அன்றுஸின் அலுவ லகம் ஆராய்ந்துவருவதாகவும், ஆனால் இவர்களை அவுஸ் திரேலியாவில் குடியமர்த்துவது தொடர்பில் ஆராயப்பட வில்லை எனவும் வெளிவிவகார அமைச்சர் மரிஸ் பயன் தெரி வித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் இதுதொடர்பில் கருத்து வெளியிட்ட வெளி விவகார அமைச்சர், குறித்த குடும்பத்தை அமெரிக்காவில் அல்லது நியூசிலாந்தில்குடியமர்த் துவதற்கான வாய்ப்பு தொடர் பில் ஆராயப்படுவதாக கூறி னார். இதற்கு மேலதிகமாக எவ் வித தகவல்களையும் வழங் குவ தற்கு அமைச்சர் மறுத்துள்ளார்.

இதேவேளை அமெரிக்கா அல்லது நியூசிலாந்தில் குடிய மர்த்தப்படுவதென்பது



'அவுஸ்திரேலிய தடுப்புமுகாம் களில் மீள்குடியேற்றத்திற்காக காத்திருக்கும் அனைவருக்கும் பொருந்தும்'(தகுதிபெற்றவர்கள் மட்டும்) என உள்துறை அமைச்சர் கரன் அன்றுஸ் வெளி யிட்டுள்ள அறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளது.

இவர்களை அமெரிக்காவில் குடியமர்த்துவதற்கே முன்னு ரிமை யளிக்கப்படுவதாகவும், நியூசிலாந்து இரண்டாவது தெரிவாக உள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

பிரியா-நடேஸின் இரண்டா வது மகள் தருணிகா மருத்துவ சிகிச்சைக்காக பெர்த்திற்கு அழைத்துவரப்பட்டுள்ள பின்ன ணியில் தமது குடும்பத்தை குயின்ஸ்லாந்தின் Biloela-வில் வாழ அனுமதிக்குமாறு பிரியா வேண்டுகோள் விடுத்த சில மணிநேரங்களில் அமைச்சர் மரிஸின் கருத்து வெளியா கியுள்ளது.

தருணிகாவுக்கு குருதித் தொற்று ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்பட்டதால் மேலதிக சிகிச்சை பெற்றுக் கொள்ளும் பொருட்டு அவர் பெர்த் மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டிருந்தார்.

கிறிஸ்மஸ் தீவில் கடந்த பத்து நாட்களாக தருணிகா கடும் காய்ச்சல்,வாந்தி, வயிற் றுப்போக்கு ஆகியவற்றினால் பாதிக்கப்பட்டிருந்தார் என்றும் இதனை அடுத்து மேலதிக சிகிச்சைக்கு கிறிஸ்மஸ் தீவு மருத்துவர்கள் பரிந்துரை செய் ததால் பெர்த்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார் என்றும் குறிப்பிடப்படுகிறது.

பிரியா- நடேஸ் தம்பதி மற்றும் ஆஸ்திரேலியாவில் பிறந்த அவர்களது இரண்டு மகள்கள் கோபிகா மற்றும் தருணிகா ஆகியோரது தடுப்பு முகாம் வாழ்க்கை கடந்த மார்ச் மாதத்துடன் மூன்று ஆண்டு களை எட்டியிருந்தது. குறிப்பாக 3 வயதான தருணிகா தனது வாழ்க்கை முழுவதையும் தடுப்பு முகாமிலேயே கழித் துள்ளார்.

# ஆடை தொழிற்சாலைகளை மூட உத்தரவிட கோரி வழக்கு!

### கரைச்சி பிரதேச சபை தொடுத்தது

கிளிநொச்சி, ஜூன் 10

கிளிநொச்சியில் கொரோனா தொற்று பரவல் ஆபத்துள்ள ஆடைத் தொழிற் சாலைகளை மூட வேண்டு மென உத்தரவிடக்கோரி, கரைச்சி பிரதேச சபையால் நேற்று கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் கொரோனா தொற்று பரவ லிற்கு ஆடைத் தொழிற்சாலை களே காரணமாக இருந்தன என்று குற்றச்சாட்டுக்கள் எழுந்தன. இதைத் தொடர்ந்து தொற்று அபாயம் குறையும் வரை அப்பகுதிகளில் ஆடைத் தொழிற்சாலைகளை மூடுவது என்று கரைச்சி பிரதேச சபை தீர்மானித்தது.

இந்தத் தீர்மானம் தொடர் பில் ஆடைத் தொழிற்சாலைக ளுக்கும் அறிவிக்கப்பட்டது. ஆனால், அந்தத் தீர்மானத் தையும் மீறி ஆடைத் தொழிற் சாலைகள் இயங்கின. இந்த நிலையில், அந்த ஆடைத் தொழிற்சாலையை மூடுமாறு உத்தரவிடக் கோரி நேற்று நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. (ஐ)

# தொற்றால் நேற்று கர்ப்பவதி தாய் பலி!

கொழும்பு, ஜூன் 10

கர்ப்பவதி தாய் ஒருவர் கொரோனா தொற்றால் நேற்று மரணமானார். இதனால், நாட் டில் தொற்றுக்குப் பலியான கர்ப்பவதிகளின் எண்ணிக்கை 9ஆக உயர்ந்துள்ளது.

இந்தத் தகவலை குடும்ப நல சுகாதார பணியகத்தின் பணிப் பாளர் மருத்துவர் சித்திரமாலி டீ சில்வா தெரிவித்துள்ளார். (ஐ)



# அஸ்ட்ரா செனகா தடுப்பூசிகளை இலங்கைக்கு ஜப்பான் வழங்கும்

### ஜனாதிபதியின் கோரிக்கைக்கு சாதகமான பதில்

கொழும்பு, ஜூன் 10

ஆறு இலட்சம் அஸ்ட்ரா செனகா தடுப்பூசிகளைப் பெற்றுத்தருமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஜப்பான் பிரதமர் யொசிஹிடே சுகாவிடம் முன்வைத்த கோரிக் கைக்குச் சாதகமான பதில் கிடைக்கப்பெற்றுள்ளது.

ஜனாதிபதிக்கு இலங்கைக் கான ஜப்பான் தூதுவர் சுகி யாமா அக்கிராவுக்கும் இடை யில், நேற்று முற்பகல் ஜனாதி பதி அலுவலகத்தில் இடம் பெற்ற சந்திப்பின்போதே இது பற்றி தெரிவிக்கப்பட்டது.

கோவிட் வைரஸ் தொற் றொழிப்பு, மருத்துவ மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு உபக ரணங்களைப் பெற்றுக்கொள் வது தொடர்பில் ஜனாதிபதி முன்வைத்த கோரிக்கைக்கு ஜப்பான் அரசாங் கம் இணக்கம் தெரிவித் துள்ளது. சமுத்திர அனர்த்தம் தொடர்பில் விரைவாகப் பதி லளிப்பதற்குத் தேவையான தொழிநுட்ப உதவிகளைப் பெற்றுக்கொள்வது தொடர் பிலும் ஜனாதிபதி ஜப்பான் தூதுவரின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

ஜப்பான் தூதுவர் அலுவ லகத்தின் பிரதித் தூதுவர் கித்தமுரா டொசிகிரோ முத லாவது செயலாளர் இமமுரா காயோ, ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ.ஜயசுந்தர, ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க மற்றும் வெளிநாட்டு அமைச் சின் செயலாளர் அட்மிரல் ஜயநாத் கொலம்பகே ஆகி யோரும் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

# நூறு நகரங்களை அழகுபடுத்துவதற்கு முன் மக்களின் வாழ்க்கையை அழகுபடுத்துங்கள்

### அடசிடம் எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 10

இலங்கை முகங்கொடுத் துள்ள அசாதாரண நிலையில் 100 நகரங்களை அழகுபடுத்து வதற்கு முன்னர், 220 இலட்சம் மக்களின் வாழ்க்கையை அழகு படுத்துவதிலேயே கவனம் செலுத்த வேண்டும் என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேம தாஸ கூறியுள்ளார்.

நாட்டில் 100 நகரங்களை அழகுபடுத்தும் திட்டத்தை செயல்படுத்த அரசு 2 ஆயிரம் மில்லியன் ரூபாயை ஒதுக்கி யுள்ளது என வெளியான செய் தியைத் தொடர்ந்து, எதிர்க் கட்சித் தலைவர் இதனைக் குறிப்பிட்டார்.

நாடு அழகாக இருப்பதில் எந்தப் பிரச்னையும் இல்லை



என்றாலும், கடந்த இரண்டு வரு டங்களாக நாட்டு மக்களின் வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டில் கல்விச் செயல் பாடு, விவசாயம், வேலை வாய்ப்பு, சுகாதாரத்துறை, பொருளாதாரம் போன்றன கடுமையாகப் பாதிக்கப்பட் டுள்ள நிலையில், நகரங்களை அழகுபடுத்தும் திட்டம் தேவையா? என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

தேசிய வளங்களை விற்பதன் மூலமும் சுற்றுச் சூழல் உள் ளிட்ட அனைத்தையும் அழிப் பதன் மூலமும் இந்த அரசு முழு நாட்டையும் இழிவுபடுத்தியுள் ளது என்றும் அவர் கவலை வெளியிட்டார்.

220 இலட்சம் மக்களின் வாழ்க்கை பரிதாபகரமான நிலையில் இருக்கும்போது நக ரங்களை அழகுபடுத்த முயற் சிப்பது, முன்னுரிமை அளிக் கப்பட வேண்டியவை குறித்து அரசுக்கு எந்தவித தெளிவும் இல்லாததையே காட்டுகின்றது என்றும் அவர் மேலும் தெரி வித்தார். (இ)

# ரணிலின் மீள்வருகை அரசுக்கு சவால் அல்ல ஐக்கிய மக்கள் சக்திக்கே அதனால் நெருக்கடி

## இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த




கொழும்பு, ஜூன் 10

**“ரணில் விக்கிரமசிங்கவின் பாராளுமன்ற மீள் வருகை அரசாங்கத்திற்கு சவால் அல்ல. கடந்த பொதுத் தேர்தலில் பழைமைவாய்ந்த ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஏற்பட்ட நிலைமையை நாங்கள் அவதானித்தோம். ஆனால், அக்கட்சியிலிருந்து பிரிந்து ஐக்கிய மக்கள் சக்தியை அமைத்தவர்களுக்கே இன்று நெருக்கடி ஏற்பட்டுள்ளது.”**

இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த. ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பத்தரமுல்லை நெலும்மாவத்தையில் உள்ள தலைமையகத்தில் நேற்று நடந்த ஊடக சந்திப்பில் இதனை அவர் தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

“ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ மீண்டும் எதிர்க்கட்சித்தலைவராக இருப்பார் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டமை குறித்து அவதானிக்க முடிந்தது. இதற்கான அவசியம் என்ன என்பதுதான் பிரச்னை. எதிர்க்கட்சித் தலைவர் இருப்பாராயின் மீண்டும் அதனை ஏன் உறுதிப்படுத்துவது என்பது பற்றிய பிரச்னையை ஐக்கிய மக்கள் சக்தியினரே ஏற்படுத்தியிருக்கின்றனர்.

**கேள்வி** - மீண்டும் வருகின்ற ரணில் விக்கிரசிங்க, ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து மிகப்பெரிய எதிர்க்கட்சியாக மாற்றமடைந்தால் அரசாங்கத்திற்கு சவாலாக மாறுமா?

**பதில்** - அரசியலில் நாளை என்ன நடக்கும் என்பது இன்று கூறமுடியாது. இலங்கை வரலாற்றில் இதனை பார்த்திருக்கின்றோம். ஒரு மணித்தியாலத்தில் எதிரிகளாக இருந்தவர்கள் அடுத்த மணிநேரத்தில் நண்பர்களாகியிருப்பார்கள். தேர்தல் காலத்தில் அதனை அவதானித்திருக்கின்றோம். அந்த வகையில் எந்த மாதிரியான இணைப்புகள், ஒன்று சேரல் வந்தாலும் அரசாங்கத்திற்கு மக்கள் ஐந்து வருட ஆணையை வழங்கியிருக்கின்றனர். கோவிட் நெருக்கடியால் சற்று சவால் ஏற்பட்டிருக்கின்றது என்றாலும் சவாலை சமாளிப்பதுதான் முக்கியமாகும்.

**கேள்வி** - கடந்த காலத்தில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீது கடுமையான விமர்சனங்கள் சமூக வலைதளங்களில் இருந்தாலும் அவற்றை அவர் தடைசெய்யவில்லை. எனினும், தற்போதைய அரசாங்கம் அவற்றை தடை செய்ய எடுத்திருக்கும் தீர்மானம் பற்றி உங்கள் கருத்து என்ன?

**பதில்** - இல்லை. எதிர்க்கட்சியினரால் கூறப்படும் விடயமே அது. வரும் நவம்பர் மாதம் வரும்போது ஜனாதிபதி ஆட்சிக்கு வந்து இரண்டு வருடங்கள் நிறைவாகும். இதனிடையே பல விமர்சனங்கள் சமூக வலைதளங்களில் இடம்பெறுகின்றன. அவற்றை தடை செய்ய அரசாங்கம் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை.

**கேள்வி** - 2022 ஆம் ஆண்டில் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ பிரதமராக நியமிக்கப்படுவார் என்பது பற்றி தகவல்கள் வெளியாகிவருகின்றன. இது குறித்து உங்கள் கருத்து என்ன?

**பதில்** - எனக்கு கருத்து என்று இல்லை. நாமல் ராஜபக்ஷவுக்கு அப்படியோர் அதிர்ஷ்டம் இருந்தால் அந்தப் பதவி கிடைக்கும். எமது நாட்டில் சிலர் அதிர்ஷ்டம் காரணமாக தெரிவாகினார்கள். அரசியலிலிருந்தே சிலரும் அதிர்ஷ்டம் காரணமாக வெளியேறினார்கள். இதனை முன்கூட்டியே தீர்மானிக்கவும் முடியாது.

கொரோனா தொற்று வரும் என்று யாருமே நினைக்கவில்லை. அதுபோல எதிர்பாராத நிலைமைகள் ஏற்படலாம். நாமல் ராஜபக்ஷ இரண்டாவது முறையாகவும் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அதிகபடியான வாக்குகளைப் பெற்று பாராளுமன்றத்திற்குத் தெரிவாகினார். சட்டத்தரணியாகவும், சிறந்த கல்வித் தகைமையிலும் அவர் உள்ளார்.

ஆனால், எந்தச் சந்தர்ப்பத்தில் அவருக்கு அதிர்ஷ்டம் கிட்டும் என்பது கூறமுடியாது. சில அரசியல்வாதிகளின் கல்வித் தகைமைகளைப் பார்க்கின்றபோது அதுபோல ஒப்பிடவும் முடியாது. அடுத்த பிரதமரை ராஜபக்ஷவே உருவாவார் என்பது பற்றி கூறமுடியாது. அதனை மக்களே தீர்மானிக்க வேண்டும்.

**கேள்வி** - பஸில் ராஜபக்ஷ எப்போது மீண்டும் நாடு திரும்புவார்?

**பதில்** - அவர் தனிப்பட்ட விடயத்திற்காக வெளிநாடு சென்றுள்ளார். அவருக்கு கிடைக்கின்ற முதலாவது சந்தர்ப்பத்தில் நாடு திரும்புவார். அவருக்காக விமான நிலையங்கள் திறக்கப்படவில்லை. குறிப்பிட்ட காலகட்டத்தில் விமான நிலையங்கள் மூடப்பட்டன. இந்தியா போன்ற நாடுகளிலிருந்து கோவிட் தொற்றாளர்கள் வராமலிருக்க இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. கடந்த முதலாம் திகதி முதல் மீண்டும் விமான நிலையங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன.

## குருநாகலிலிருந்து அம்பாறைக்கு உரம் கடத்திய இருவர் கைது

மட்டக்களப்பு, ஜூன் 10

குருநாகலில் இருந்து அம்பாறைக்கு அத்தியாவசிய சேவை என்ற பேரில் அரசு மானியமாக வழங்கிய உரத்தை சட்டவிரோதமாக லொறி ஒன்றில் கடத்திச் சென்ற இருவரை மட்டக்களப்பு தாழங்குடா பகுதியில் வைத்து நேற்று புதன்கிழமை அதிகாலையில் கைது செய்துள்ளதாகவும் 53 பைகளில் உரத்தை மீட்டுள்ளதாகவும் காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

இராணுவ புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவலுக்கமைய நேற்று அதிகாலை தாழங்குடா பகுதியில் இராணுவத்தினர் வீதிச்சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டபோது அம்பாறை கல்முனை பகுதியை நோக்கி பிரயாணித்த லொறியை நிறுத்தி சோதனையிட்டனர்.

இதன் போது அத்தியவசிய சேவை என்ற போர்வையில் அரசு மானியமாக வழங்கிய உரத்தை சட்டவிரோதமாக கடத்தி செல்வதாகவும் கண்டறிந்ததையடுத்து அந்த லொறி சாரதி மற்றும் உதவியாள் உட்பட இருவரை இராணுவத்தினர் கைது செய்ததுடன் அதில் இருந்து 53 உரப் பைகள் கொண்ட உரத்தை மீட்டனர்.

இதில் கைது செய்தவர்களையும் மீட்கப்பட்ட உரபைகள் மற்றும் லொறி என்பவற்றை இராணுவத்தினர் காத்தான்குடி பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளதாகவும் இவர்களை நேற்று மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோது இருவரையும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# மட்டக்களப்பு வாகரையில் ஆதிவாசிகளுக்கு பொலிசார் நிவாரணப் பொதி வழங்கிவைப்பு



மட்டக்களப்பு, ஜூன் 10,

பயணக் கட்டுப்பாடு காரணமாக மட்டக்களப்பு வாகரை பிரதேசத்தில் உணவின்றி பாதிக்கப்பட்டுள்ள ஆதிவாசி குடும்பங்களை சேர்ந்த 150 குடும்பங்களுக்கு மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுகத் மாசிங்க தலைமையிலான பொலிஸ் குழுவினர் நேற்று முன்தினம் ஒரு தொகை நிவாரணப் பொதிகளை வழங்கி வைத்தனர்.

வாகரை பிரதேசத்தின் ஆதிவாசி மக்களின் தலைவர் அம்பலவர்கே நல்லதம்பி வேலாயுதம் பயணத் தடை காரணமாக தமது மக்கள் உணவின்றி பாதிக்கப்பட்டுள்ளதாக இலங்கைக்கான ஆதிவாசிகளின் தலைவர் ஊர்வக்கே வன்னிலத்தோவிடம் வேண்டுகோள் விடுத்தார்.

இதனையடுத்து அவர் மட்டக்களப்பு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுகத் மாசிங்கவிடம் இவ் விடயம் தொடர்பான கோரிக்கையினை முன்வைத்ததையடுத்து குறித்த பிரதேசத்திற்கு ஒரு தொகை நிவாரணப் பொதிகளுடன் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வாழைச்சேனை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பி.எம்.ஜெயசுந்தர, மட்டக்களப்பு பொலிஸ் தலைமையக பொலிஸ் பொறுப்பதிகாரி பி.கே.ஹொட்டியாராச்சி, ஏறாவூர் பொலிஸ் நிலை பொறுப்பதிகாரி ஜெயந்த, வாழைச்சேனை பொலிஸ் நிலை பொறுப்பதிகாரி தனஞ்சயபெரமுன , மற்றும் வாகரை பொலிஸ் பொறுப்பதிகாரி ஜே.பி.விஜேயவர்த்தன ஆகியேர் கொண்ட பொலிசாருடன் சென்று பணிச்சங்கேணி, மாங்கேணி, கிருமிச்சை, குஞ்சன் கல் குளம், கொக்குவில் போன்ற கிராமங்களில் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு இந்த நிவாரணப் பொதிகளை வழங்கி வைத்தனர்.

இதன் பின்னர் ஆதிவாசி மக்களின் குறைகளை கேட்டறிந்து கொண்ட பொலிஸ் அத்தியட்சகர் தமது வழிகாட்டலில் இவ் நடவடிக்கையை முன்னெடுத்ததாகவும் தெரிவித்தார் இதனையடுத்து ஆதிவாசிகள் தலைவர் நல்லதம்பி வேலாயுதம் உணவு பொருட்கள் வழங்கி வைத்த பொலிஸ் அத்தியட்சகர் தலைமையிலான பொலிஸ் குழுவினருக்கு நன்றியை தெரிவித்ததுடன் மேலும் இது போன்ற தமது மக்கள் ஏனைய கிராமங்களில் வாழ்ந்து வருவதாகவும் அவர்களுக்கும் நிவாரணப் பொதி வழங்க ஏற்பாடு செய்து தருமாறும் கோரிக்கை விடுத்துள்ளார்.

## மட்டக்களப்பில் 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை ஆரம்பித்து வைப்பு

மட்டக்களப்பு, ஜூன் 10

மட்டக்களப்பு மாவட்டத்தில் 60 வதுக்கு மேற்பட்டவர்களுக்கு கொரோனா தடுப்பூசி ஏற்றும் பணி நேற்று புதன்கிழமை மட்டக்களப்பு கொரோனா தடுப்பு செயலணிக்கு ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ள இராணுவ பிரதானி 23 வது படைப்பிரிவின் தளபதி மேஜ ஜெனரல் நளின் கொஸ்வத்த, அரசாங்க அதிபர் க.கருணாகரன் ஆகியோர் ஆரம்பித்து வைத்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை 25 ஆயிரம் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை ஆரம்பித்துவைத்து அதில் அரசாங்க உத்தியோகத்தர்கள், பொலிஸார் உட்பட 750 பேருக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டது.

இதனையடுத்து தொடர்ந்து தனிமைப்படுத்தப்பட்டு முடக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட பகுதிகளான திருச்செந்தூர் விபுலானந்தாவித்தியாலயம், கல்லடி வேலூர் ஸ்ரீ சக்தி வித்தியாலயம் , நாவற்குடா கிழக்கு சாரதா வித்தியாலயங்களில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையை மட்டக்களப்பு கொரோனா தடுப்பு செயலணிக்கு ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ள இராணுவ பிரதானி 23 வது படைப்பிரிவின் தளபதி மேஜர் ஜெனரல் நளின் கொஸ்வத்த, 231 வது படைப்பிரிவின் பிறிகேட் கொமாண்டர் வீ.எம்.என்.எட்டியாராச்சி, அரசாங்க அதிபர் க.கருணாகரன் ஆகியோர் ஆரம்பித்துவைத்தனர்.





# இலங்கையின் இரண்டு முகங்கள்!

நா. யோகேந்திரநாதன்

ஏப்ரல் 21 தாக்குதல் காரணமாகவும், கொரோனா தொற்று காரணமாக வும் பெரும் பாதிப்புக்குள்ளாகிய இலங்கையின் சுற்றுலாத்துறைக்கு அமெரிக்கா வெளியிட்டுள்ள அமெரிக்க பிரஜைகளுக்கான பயணத் தடை அறிவித்தல் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அண்மையில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அமெரிக்கப் பிரஜைகளுக்கான வெளிநாட்டுப் பயண எச்சரிக்கை தொடர்பாக வெளியிட்டுள்ள அறிவித்தலில் பட்டியலிடப்பட்ட நாடுகளில் இலங்கையும் ஒரு நாடாக உள்ளடக்கப்பட்டுள்ளது. இலங்கை பற்றிய பாதுகாப்பு எச்சரிக்கையில் பிரதான விடயமாக இலங்கையில் கொரோனா அபாயம் பற்றிக் குறிப்பிட்டுள்ள வேளையில் நான்காவது விடயமாக பயங்கரவாத அச்சுறுத்தல் பற்றிச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வறிவித்தல் வெளியானதுமே இலங்கை வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன அமெரிக்கத் தூதுவரைத் தனது செயலகத்துக்கு அழைத்து அவரிடம் பயங்கரவாத அச்சுறுத்தல் இலங்கையில் இல்லை என விளக்கமளித்ததுடன் அமெரிக்காவின் கருத்துக்கு தனது ஆட்சேபனையையும் தெரிவித்திருந்தார்.

அதன்பின்பு அமெரிக்கத் தூதுவர் விடுத்துள்ள அறிக்கையில் இலங்கையில் பயங்கரவாத அச்சுறுத்தல் தொடர்பாக தங்கள் முன்னைய கருத்தில் எவ்வித மாற்றமுமில்லையென அறிவிக்கப்பட்டிருந்தது. அதாவது இலங்கை வெளிவிவகார அமைச்சரின் ஆட்சேபனையைத் தாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை அமெரிக்கத் தூதரகம் தனது அறிக்கை மூலம் வெளிப்படுத்தியுள்ளது.

இலங்கை எப்போதுமே சர்வதேசத்துக்கு ஒரு முகமும் உள்ளூரில் வேறொரு முகமுமாக இரட்டை முகங்களைக் காட்டிவருவது என்பது அப்படியொன்றும் புதிய விடயமல்ல.

இலங்கையில் பயங்கர வாதம் முற்றாக ஒழிக்கப்பட்டு இங்கு சமாதானமும் நல்லிணக்கமும் நிலவுவதாக சர்வதேச அரங்கில் கூறிக்கொண்டு பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகள் என்ற பெயரில் பலர் கைது செய்யப் படுவதும் தொடர்ந்து தடுத்து வைக்கப்படுவதும் இடம்பெற்று வருகின்றன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் 31/1 தீர்மானத்தை ஏற்றுக் கொண்டதன் மூலம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதாக இலங்கை ஒப்புக் கொண்டபோதிலும் அது இன்றுவரை நீக்கப்படாதது மட்டுமின்றி அச்சட்டத்தின் கீழ் கைதுகளும் தடுத்து வைக்கப்படுவதும் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

இவ்வாறு உள்நாட்டில் பயங்கரவாத அச்சுறுத்தல் இருப்பதாகக் காட்டிக் கொண்டு கைதுகளையும் பழிவாங்கல் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு அரசாங்கம் தங்கள் அதிகாரத்தையும் அநீதிகளையும் நிலை நாட்டியவாறே சர்வதேசத்தின் முன்னால் இங்கு பயங்கரவாத அச்சுறுத்தல் இல்லையெனச் சத்தியம் பண்ணினால் அதை அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியுமா?

பாராளுமன்ற உறுப்பினர் ரிசாத் பதியுதீன், அவர்கள் ஏப்ரல் குண்டுத் தாக்குதல் ஆயுததாரிகளுடன் தொடர்பைப் பேணி வந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

அவர் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் பாராளுமன்றக் கூட்டத் தொடரில் பங்கு கொள்ள அனுமதி கோரியபோது பொதுசனப் பாதுகாப்பு

> **இலங்கையில் பயங்கரவாதம் முற்றாக ஒழிக்கப்பட்டு இங்கு சமாதானமும் நல்லிணக்கமும் நிலவுவதாக சர்வதேச அரங்கில் கூறிக் கொண்டு பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகள் என்ற பெயரில் பலர் கைது செய்யப் படுவதும் தொடர்ந்து தடுத்து வைக்கப்படுவதும் இடம்பெற்று வருகின்றன.**

அமைச்சர் அவர் பாராளு மன்றத்திற்கு அழைத்து வரப்படுவதைக் கடுமையாக எதிர்த்தார். அவர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு அவர் விசாரணைக்கு உட்படுத்தப் பட்டிருப்பதால் அவர் பாராளுமன்றத்துக்கு அழைத்து வரப்படுவது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் எனவும் பயங்கரவாத நடவடிக்கைகளுக்குச் சாதகமாக அமைந்து விடுமெனவும் அமைச்சர் வாதிட்டார்.

எனினும், பாராளுமன்ற உறுப்பினருக்குரிய சிறப்புரிமை காரணமாக ரிசாத் பதியுதீனால் கூட்டத் தொடரில் பங்கு கொள்ள முடிந்தது. பாராளுமன்ற உறுப்பினர் ரிசாத் பதியுதீன் அங்கு உரையாற்றும் போது தான் பல மாதங்களாகத் தடுத்து வைக்கப்பட்ட போதும் உரிய விசாரணை எதுவும் நடத்தப்படவில்லையெனக் குறிப்பிட்டதுடன் தான் பயங்கரவாதக் குற்றங்களுடன் தொடர்புபட்டதாக நிரூபிக்கப்பட்டால் தான் தூக்குத் தண்டனையைக்கூட ஏற்றுக்கொள்ளத் தயார் எனவும் சவால் விட்டார்.

இங்கு இரண்டு விடயங்கள் கவனத்தில் எடுக்கப்படவேண்டும். ஒன்று, அவர் தாக்குதல்தாரிகளுடன் நேரடியாகத் தொடர்புபட்டிருந்தார் என்ற குற்றச்சாட்டில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் இரண்டு வருடங்களின் பின்பு கைது செய்யப்பட்டமை மூலம் இன்னும் பயங்கரவாத அச்சுறுத்தல் உண்டு என்ற காரணத்தை வெளிப்படுத்துகிறது. அடுத்தது அவர் பாராளுமன்றத்துக்கு வருவதை அமைச்சர் எதிர்த்தமை ரிசாத் அங்கு வந்து உரையாற்றுவது ஏனைய பயங்கரவாதிகளை உற்சாகப் படுத்தி விடும் என்பதனாலாகும்.

இந்த நடவடிக்கை மூலம் பொதுசனப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர இங்கு பயங்கரவாத அச்சுறுத்தல் உண்டு என்பதை மூலமாக வைத்தே தன் ஆட்சேபனையை முன் வைத்துள்ளார். அவர் ஒரு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் என்ற வகையில் அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்புக் கமைய அரசாங்கமும் நாட்டில் பயங்கரவாத அச்சுறுத்தல் உண்டு என்பதை ஏற்றுக்கொண்டதாகவே அர்த்தமாகும்.

அது மட்டுமின்றி பிரதான குண்டுதாரியான சஹ்ரானுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டிலும், பயங்கரவாத வகுப்புகளை நடத்தினர் என்ற பேரிலும் இன்னும் பலர் தொடர்ந்து கைது செய்யப்பட்டு வருகின்றனர். முற்றாகவே முஸ்லிம் அடிப்படைவாதம், பயங்கரவாத அச்சுறுத்தல் களையப்பட்டு விட்டால் ஏன் இந்தக் கைது நடவடிக்கைகள் தொடர்கின்றன என்ற கேள்வி எழுவது தவிர்க்க முடியாததாகும். ஏற்கனவே விடுதலைப் புலிகளின் பயங்கரவாத அச்சுறுத்தல் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு விட்டதாகக் கூறப்பட்டு விட்டபோதிலும் ஒட்டுசுட்டானில் வைத்து பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனைக் கொலை செய்யும் நோக்குடன் முச்சக்கர வண்டியில் சென்றார்களென நால்வர் கைது செய்யப்பட்டனர். அத்துடன் மட்டக்களப்பு வவுணதீவில் இரு பொலிஸ்காரர்களைக் கொலை செய்தனர் என்ற குற்றச்சாட்டில் முன்னாள் போராளி உட்பட இருவர் கைது செய்யப்பட்டனர்.

ஆனால், ஒட்டுசுட்டானில் கைது செய்யப்பட்ட நால்வரில் ஒருவர் பல வருடங்களாக இராணுவத்தில் மாதச் சம்பளம் பெறும் ஓர் உளவாளி என்பது விசாரணையிலிருந்து தெரிய வந்தது. இவ்வாறே வவுணத்தீவு பொலிஸாரின் கொலை சஹ்ரானின் உதவியாளராலேயே மேற்கொள்ளப்பட்டதெனவும் அதற்கான தகவல்களை இரு இராணுவ அதிகாரிகளே வழங்கினரெனவும் ஏப்ரல் தாக்குதல் விசாரணைகளின்போது தெரிய வந்தது.

எனவே, பயங்கரவாத அச்சுறுத்தல் என்பது சில தரப்பினரால் சிலரைக் கைது செய்யவும் பழிவாங்கவும் பயங்கரவாதத் தடுப்பின் பேரால் தமது ஒடுக்குமுறைகளைத் தொடரவும் திட்டமிட்டுத் தோற்றுவிக்கப்படுவது என்பதை புரிந்து கொள்ளமுடியும்.

இவ்வாறான நடவடிக்கைகளை தற்சமயம் அமைச்சர் சரத் வீரசேகர தலைமை தாங்கி முன்னெடுத்துச் செல்கிறார் என்ற தோற்றப்பாடே வெளிப்படுகிறது.

இந்த நிலையிலேயே அமெரிக்கா இலங்கையில் பயங்கரவாத அச்சுறுத்தல் நிலவுவதாகத் தனது பிரஜைகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது. இன்று இலங்கை அரசால் தமது நோக்கங்களை நிறைவேற்ற உருவாக்கப்படும் பயங்கரவாத அச்சுறுத்தல் மாயை அவர்களை சர்வதேச மட்டத்திலேயே சிக்கலுக்கு உட்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் இந்த எச்சரிக்கையை வெளிவிவகார அமைச்சர் மட்டுமின்றி பாதுகாப்புச் செயலர் கமல் குணரட்ணவும் கடுமையாக மறுத்துள்ளார்.

இராணுத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா, பாதுகாப்பு செயலர் கமல் குணரட்ண ஆகிய முக்கிய அதிகாரத்தில் உள்ளவர்கள் சர்வதேச அளவில் போர்க் குற்றவாளிகளாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள நிலையில் இலங்கை தரப்பின் ஆட்சேபனைக்கு அமெரிக்கா மதிப்பளிக்குமென எதிர்பார்க்கமுடியாது.

இலங்கையில் பயங்கரவாத அச்சுறுத்தல் உண்டோ இல்லையோ ஆனால், மக்கள் மத்தியில் குறிப்பாக சிறுபான்மை மக்கள் மேல் ஒரு பயங்கரவாத அச்சுறுத்தல் மேகம் கவிந்திருப்பதை மறுத்துவிட முடியாது.

**நன்றி: அருவி**

# வடகொரியாவில் நடப்பதென்ன? அதிரடியாக பிடியை இறுக்கும் கிம்

**“வெளிநாட்டு கலாசாரங்கள் நாட்டுக்குள் வேரூன்றிவிட்டால் இளைஞர்கள் மத்தியில் அரசுக்கு எதிரான மனநிலை உருவாகிவிடும் என்பதால் தனக்கும், தனது அரசாங்கத்துக்கும் எந்தவித எதிர்ப்பு குரலும் எழுந்திடாத வண்ணம் மிகவும் பாதுகாப்பாக ஒவ்வொரு நகர்வையும் எடுத்துவருகிறார் அதிபர் கிம் ஜாங் உன்.”**

அதியமான்

சில தினங்களுக்கு முன்பு, வடகொரியாவின் தலைநகரான பியோங்யாங்கில் தான் லீ என்ற இளைஞருக்கு சுமார் 500 வட கொரியர்கள் மத்தியில் மரண தண்டனை மிகக் கொடூரமாக நிறைவேற்றப்பட்டது.

உலகமே தினம் தினம் கொரோனா ஏற்படுத்திவரும் கோரத்தைக் கட்டுக்குள் கொண்டுவர பல்வேறு நடைமுறைகளையும், கடுமையான விதிகளையும் பின்பற்றி ரும் சூழலில் ‘எங்கள் நாட்டில் ஒருவர்கூட கொரோனாவால் பாதிக்கப் படவில்லை!’ என்று தில்லாகக் கூறிக்கொண்டு, வழக்கம்போல் உலக நாடுகளின் கவனத்தைத் தனது புதுப்புதுச் சட்டங்களின் மூலம் வடகொரியாவின் பக்கம் ஈர்த்திருக்கிறார் அந்நாட்டு அதிபர் கிம் ஜாங் உன்.

**என்ன நடக்கிறது அங்கே?!**

சில தினங்களுக்கு முன்பு, வட கொரியாவின் தலைநகரான பியோங்யாங்கில் தான் லீ என்ற இளைஞருக்கு சுமார் 500 வடகொரியர்கள் மத்தியில் மரண தண்டனை மிகக் கொடூரமாக நிறைவேற்றப்பட்டது. காரணம், அவர் வெளிநாட்டுத் திரைப்படங்களின் சி.டி-க்களை வட கொரியாவில் கள்ளச்சந்தையில் விற்றார் என்பதே! ‘இதற்கு எதற்கு மரண தண்டனை கொடுக்க வேண்டும்?’ என்று தோன்றினால் அந்நாட்டின் சட்ட விதிகள் அவ்வாறு அமைக்கப்பட்டிருப்பதுதான் காரணம்.

வட கொரிய அதிபர் கிம் ஜாங் உன் தனது சர்வாதிகாரப் போக்கால் உலக நாடுகள் அனைத்திலும் அறியப்படுபவர். அவ்வப்போது சைலன்ட் மோடில் போவது, பிறகு மீண்டும் தனது அதிரடி ஆட்டத்தை ஆரம்பிப்பது என சர்வதேச ஊடகங்களின் எவர் கிரீன் டிரெண்டிங் மெட்டீரியல் இவர்தான். வடகொரியாவை பொறுத்தவரையில் அங்கு இணையதளம் கிடையாது, சமூக வலைதளங்கள் கிடையாது, தொலைக்காட்சி சேனல்களிலும் மிகவும் கட்டுபாடுகளுடன் கூடிய குறைவான சேனல்கள் மட்டுமே இன்றும் இயங்கிவருகின்றன. நாட்டின் ஒவ்வொரு நகர்வும் அதிபர் கிம் ஜாங் உன்னின் மிகக் கடுமையான கட்டுப்பாட்டில்தான் இருந்து வருகிறது. மக்கள் எந்தவிதமான முற்போக்கு எண்ணங்களாலும், அயல்நாட்டுச் சிந்தனைகளாலும் ஆட்பட்டுவிடக் கூடாது என்பதில் மிகக் கவனமாக இருக்கிறார். மீறி அதில் ஈடுபடுவோருக்கே இந்தக் கொடூரமான தண்டனைகள் வழங்கப்பட்டுவருகின்றன.

சமீபத்தில் இறுக்கமான ஜீன்ஸ்களையும், அயல்நாட்டு ரீ- ஷர்ட்களையும் அணியக் கூடாது என செக் வைத்தார். அதேபோல், வெளிநாட்டு கலாசாரத்தை ஒட்டிய அலங்காரம், தலை அலங்காரம், மூக்குத்தி அணிவது உள்ளிட்டவற்றுக்குத் தடை விதித்தார். அதைத் தொடர்ந்து, தற்போது வெளிநாட்டு படங்கள் மற்றும் வெப்- சீரீஸ்களைப் பார்க்க தடை விதித்துள்ளார். மீறிப் பார்ப்பவர்கள் பிடிபட்டால் அவர்களுக்கு 15 ஆண்டுகளுக்கு சிறைவாசம் மற்றும் அதை அதிக அளவில் வைத்திருப்போருக்கு மரண தண்டனை விதிக்கப்படும் என்று தெரிவித்துள்ளார். மேலும் இவை எல்லாவற்றையும் கண்காணிக்கத் தனிக்குழு ஒன்றையும் அமைத்துள்ளார்.



**வெளிநாட்டுத் திரைப்படங்கள்**

வடகொரிய மக்கள் உலக நடவடிக்கைகளிலிருந்து தனித்தே வாழ்ந்து வருவதால், அவர்களுக்குப் பொழுதுபோக்கு அம்சம் மிகவும் குறைவே. சினிமா போன்ற எவற்றுக்கும் அங்கு அனுமதியில்லை. இதனால், சீனா மற்றும் தென் கொரியாவின் சினிமா, வெப் தொடர்களின் சிடிக்களை சீன எல்லையின் வழியாக மறைமுகமாகக் கொண்டுவந்து அதை வாங்கிப் பார்ப்பார்கள்.

சில சமயங்களில், இதைப் பாதுகாப்பாக எடுத்துவர இரகசியமான கடவுச்சொற்கள் மற்றும் குறிப்பிட்ட சாதனங்களில் மட்டும் இயங்கும் வகையில் இதைக் கொண்டு வந்து மக்கள் இரகசியமாக சினிமாவைப் பார்த்துள்ளனர். இதற்கெல்லாம் முட்டுக்கட்டை போடும்விதமாக அமைந்துள்ளது அதிபர் கிம்மின் புதிய சட்டங்கள். இந்தச் சட்டங்களின் அடிப்படையில் தான் தான் லீக்கு மரண தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் இதற்கான விதை கடந்த 2002ஆம் ஆண்டே போடப்பட்டுவிட்டதாக அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சட்டங்கள் தொடர்பாக, அந்நாட்டு அரசு ஊடகத்துக்கு கிம் ஜாங் உன் எழுதியுள்ள கடிதத்தில், “ஒரு நிறுவனத்தில் ஊழியர் தவறு செய்தால், அந்த நிறுவனத்தின் உரிமையாளரும் தண்டனை அனுபவிக்க வேண்டும். அதேபோல், ஒரு குடும்பத்தில் குழந்தைகள் தவறு செய்துவிட்டால் பெற்றோர்களுக்கும் தண்டனை உண்டு” போன்றவற்றை குறிப்பிட்டிருந்தார். மேலும், வெளிநாட்டு கலாசாரங்கள் யாவும் நஞ்சை விதைக்கும் என்று கூறியுள்ளார். அந்தக் கண்ணோட் டத்திலேயே இந்தப் புதிய சட்டங்கள் நிறைவேற்றப்பட் டுள்ளன.

**கிம் ஜாங்கின் அச்சம்**

வெளிநாட்டு கலாசாரங்கள் நாட்டுக்குள் வேரூன்றிவிட்டால் இளைஞர்கள் மத்தியில் அரசுக்கு எதிரான மனநிலை உருவாகிவிடும் என்பதால் தனக்கும், தனது அரசாங்கத்துக்கும் எந்தவித எதிர்ப்பு குரலும் எழுந்திடாத வண்ணம் மிகவும் பாதுகாப்பாக ஒவ்வொரு நகர்வையும் எடுத்துவருகிறார் அதிபர் கிம் ஜாங் உன்.

ஏற்கெனவே, கொரோனா தொற்று காரணமாக வட கொரியா, சீனாவுடனான தனது எல்லையை முழுவதுமாக மூடியுள்ளது. சீனாவிலிருந்து வந்துகொண்டிருந்த அத்தியாவசியப் பொருள்கள் வருவதிலும் சிக்கல் ஏற்பட்டிருப்பதால் மக்கள் அவதிப்பட்டுவருகின்றனர். நாட்டின் பெரும்பாலான நிதி அணு ஆயுத ஆராய்ச்சிக்கே செலவிடப்படுவதால், பொருளாதார ரீதியாகவும் நாடு பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.



முன்னெப்போதும் இல்லாத வகையில் கடந்த இரண்டாண்டுகளில் வட கொரியர்கள் அதிகப்படியான நெருக்கடிகளைச் சந்தித்துவருகின்றனர். ஏற்கெனவே, உலக நடவடிக்கைகளிலிருந்து துண்டிக்கப்பட்டு வாழ்ந்துவரும் வட கொரியர்களின் வாழ்வை இவை மேலும் தனிமைப்படுத்தும். இது கிம் ஜாங் உன் நிகழ்த்திவரும் சர்வாதிகாரப் போக்கின் உச்சம் என்று சர்வதேச அரசியல் விமர்சகர்கள் பலரும் விமர்சித்து வருகின்றனர்.

# புலமைச் சிகரம்

## ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை - 5
வினாத்தாள் I

நேரம் - 45 நிமிடம்
ஆசிரியர் - சரத்பாபு

8. வியாழக்கிழமை இரண்டாம் பாடமாகவும் செவ்வாய்க்கிழமை மூன்றாம் பாடமாகவும் நடைபெற்ற பாடங்கள் முறையே,

1. சுற்றாடல், சிங்களம்  2. சிங்களம், தமிழ்  3. தமிழ், சிங்களம்

9. கீழே தரப்பட்டுள்ள பந்தியை வாசித்து விடைகளைத் தெரிக.


உன் கதையைக் கேட்கும் போது ..........(1).......... இருக்கிறது. எனக்கு அனுதினமும் பழங்களும் பருப்பும் கொடுக்கிறார்கள். என்னுடன் கொஞ்சி விளையாடுகிறார்கள். ..........(2).......... என்னால் சுதந்திரமாகப் பறக்க முடியவில்லையே! (1), (2) ஆகிய இடங்களிற்கு வரக் கூடிய பொருத்தமான சொற்கள் முறையே

1. ஆசையாக, விரும்பினாலும்
2. சந்தோசமாக, வெளியில்
3. பரிதாபமாக, சிறகிருந்தும்

10. பெரேரா தனது அறுபதாவது பிறந்த நாளை 2020 ஆம் ஆண்டு கொண்டாடுவார். அவர் தனது முப்பத்தைந்தாவது பிறந்தநாளைக் கொண்டாடியது எந்த நூற்றாண்டில், எந்தத் தசாப்தத்தில்?

1. 19 ஆம் நூற்றாண்டின் 08 ஆம் தசாப்தத்தில்
2. 20 ஆம் நூற்றாண்டின் 09 ஆம் தசாப்தத்தில்
3. 20 ஆம் நூற்றாண்டின் 10 ஆம் தசாப்தத்தில்

* பின்வரும் உருவை அவதானித்து 11, 12 ஆம் வினாக்களிற்கு விடைகளைத் தெரிவு செய்க.





11. மூன்று விளையாட்டையும் விரும்பும் மாணவர் யார்?

1. ரவி  2. நிலா  3. கஜித்

12. இரண்டு விளையாட்டுக்களை மாத்திரம் விரும்பும் மாணவர்கள்?

1. சைமன், சுகீர்  2. ரமணன், நிலா  3. சீலா, சைமன்

13. இவ் உருவில் காணப்படும் நாற்பக்கல், முக்கோணிகளின் எண்ணிக்கை முறையே?




1. 13, 9  2. 15, 9  3. 16, 9

14. வினோத்தின் தந்தை, செல்வாவின் தந்தைக்கு அண்ணன். வினோத்தின் தந்தையை செல்வாவின் மகன் கெனத் என்ன முறை சொல்லி அழைப்பார்?

1. சித்தப்பா  2. அப்பப்பா  3. மாமா

15. சதுர வடிவக் கடதாசி ஒன்றைக் குறித்தவாறு மடித்துத் துளையிடப்பட்டக் பின்னர் விரித்துப் பார்க்கும் போது தோன்றும் வடிவம் எது?





* தரப்படும் எல்லாக் கருத்துக்களுடனும் பொருந்தும் படத்தைத் தெரிவு செய்யுங்கள்.

16. தோட்டம் - விவசாயி - அறுவடை





17. தரப்படும் படத்துடன் தொடர்பு குறைந்த விடையைத் தெரிவு செய்க.




1. அழகு, மென்மை, உணவு
2. காடு, சுத்தம், நோய் காவி
3. கூர்மை, இரவு, பிராணி

* 18, 19 ஆகிய வினாக்களில் அடுத்துவர வேண்டிய உருவைத் தெரிக.


18.




19.





20. தரப்படும் சதுரமுகி வடிவான தாயக்கட்டையினை வெட்டி விரிக்கும் போது சரியாகத் தெரியக் கூடிய முறை எது?




* 21, 22 ஆம் வினாக்களில் கோலத்தை இனங்கண்டு வெற்றிடத்துக்கு பொருத்தமான எண்ணைத் தெரிக.

21.




1. 126  2. 115  3. 125

# சமூக ஊடகங்களை அடக்கி ஒடுக்கவே விசேட கண்காணிப்பு குழு நியமனம்

## அரசு மீது சஜித் அணி குற்றச்சாட்டு



**"போலித் தகவல்களைப் பரப்புவோரைக் கைதுசெய்கின்றோம் என்ற போர்வையில் சமூக ஊடகங்களை ஒடுக்குவதற்கு அரசு முயற்சிக்கின்றது." - இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார குற்றஞ்சாட்டினார்.**

சமூகவலைதளங்களைக் கண்காணிக்க விசேட சி.ஐ.டி. குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் மனுஷ நாணயக்கார எம்.பி. மேலும் கூறியதாவது:-

"போலித் தகவல்களைப் பரப்புவோரைக் கைதுசெய்ய நடவடிக்கை என்ற போர்வையில் சமூக ஊடகங்கள் தணிக்கைக்கு உட்படுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. எவராவது போலித் தகவல் பரப்பினால் அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதை ஏற்கின்றோம். ஆனால், சமூக ஊடகங்களை மிரட்டி, நாட்டின் உண்மையான நிலவரம் தொடர்பான தகவல்கள் மக்களுக்குச் சென்றடைவதைத் தடுப்பதற்காக ஒடுக்கு முறையை அரசு கையாண்டு, கைது படலத்தையும் ஆரம்பித்துள்ளது. இது தொடர்பில் அரசின் உண்மையான நிலைப்பாடு என்ன?" - என்று கேள்வி எழுப்பினார்.(இ)



### தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் 1,034 பேர் கைது

கொழும்பு, ஜூன் 10

தனிமைப்படுத்தல்சட்டத்தை மீறிய மேலும் 1,034 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

தனிமைப்படுத்தல் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் தொடக்கம் இதுவரை அந்தச் சட்டத்தை மீறிய 26 ஆயிரத்து 920 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (இ)

# உயர்நீதிமன்ற நீதியரசராக ஒபேசேகரவை நியமிக்க பாராளுமன்ற பேரவை அனுமதி

கொழும்பு, ஜூன் 10

கொழும்பு, மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி அர்ஜுன ஒபேசேகரவை உயர்நீதிமன்றத்தின் நீதியரசராக நியமிப்பதற்கு ஜனாதிபதி மேற்கொண்ட பரிந்துரைக்கு பாராளுமன்ற பேரவை இணக்கம் தெரிவித்துள்ளது.

உயர்நீதிமன்றத்தின் நீதியரசர் சிசிர.ஜே.டி.ஆப்ரூ ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கே ஜனாதிபதி இந்தப் பரிந்துரையை மேற்கொண்டிருந்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பாராளுமன்ற பேரவைக் கூட்டத்திலேயே இதற்கான இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, கடற்றொழில் மற்றும் நீரியல்வளத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கபீர் ஹாசிம் ஆகியோர் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

அதேநேரம், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தற்போதைய தலைவர் உயர் நீதிமன்றத்தின் நீதியரசராக நியமிக்கப்படுவதால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் பதவியில் ஏற்படும் வெற்றிடத்துக்கு நீதிபதி கே.பி.பெர்ணாந்துவை நியமிப்பதற்கு ஜனாதிபதி முன்வைத்த பரிந்துரைக்கும் பாராளுமன்ற பேரவை இணக்கம் தெரிவித்திருப்பதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தஸநாயக தெரிவித்தார்.

அதேநேரம், நீதிபதி கே.பி. பெர்ணாந்து மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் பதவிக்கு நியமிக்கப்படுவதால் ஏற்படும் வெற்றிடத்துக்கு மேல் நீதிமன்றத்தின் நீதிபதி சஷி மகேந்திரனை நியமிப்பது தொடர்பில் ஜனாதிபதி முன்வைத்த பரிந்துரைக்கும் அரசியலமைப்புப் பேரவை தனது இணக்கத்தைத் தெரிவித்திருப்பதாக செயலாளர் நாயகம் குறிப்பிட்டார்.

அதேநேரம், நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவியில் ஏற்படும் வெற்றிடத்துக்கு உயர் நீதிமன்ற நீதியரசர் எல்.ரி.பி.தெஹிதெனியவை நியமிப்பதற்கும் இங்கு இணங்கப்பட்டது எனப் பாராளுமன்ற செயலாளர் நாயகம் மேலும் தெரிவித்தார். (இ)



# நுவரெலியா நகரில் முதற் கட்டமாக 3 ஆயிரம் பேருக்கு நேற்று தடுப்பூசி

நுவரெலியா, ஜூன் 10

நுவரெலியாவில் 3 ஆயிரம் பேருக்கு நேற்று முதற் கட்டமாகக் கொரோனா தடுப்பூசிகள் வழங்கப்பட்டன.

நுவரெலியா சுகாதாரப் பணியகத்தின் ஏற்பாட்டில் நுவரெலியா காமினி தேசிய கல்லூரியில் மாவட்ட செயலாளர் நந்தன கலபட தலைமையில் இந்தத் தடுப்பூசி வழங்கும் திட்டம் நடைபெற்றது.

இதன்போது நுவரெலியா பிரதேசத்தில் கடமையாற்றும் கிராமசேவகர்கள், கிராம அபிவிருத்தி அதிகாரிகள், பொலிஸ் இராணுவ அதிகாரிகள், இலங்கை மின்சார சபை உத்தியோகத்தர்கள், நுவரெலியா மாநகர சபை உறுப்பினர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள், நுவரெலியா பிரதேசபை உத்தியோகத்தர்கள் உட்பட பல அரச உத்தியோகத்தர்களுக்குத் தடுப்பூசிகள் வழங்கப்பட்டன என்று நுவரெலியா மாவட்ட செயலாளர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

"நுவரெலியா மாவட்டத்துக்கு 50 ஆயிரம் தடுப்பூசிகள் கிடைத்துள்ளன. இன்று (நேற்று) முதல் நுவரெலியாவில் தடுப்பூசி வழங்கும் திட்டத்தை ஆரம்பித்துள்ளோம். இதனைத் தொடர்ந்து கொத்மலை, வலப்பனை, அங்குராங்கெத்த மற்றும் அம்பகமுவ பிரதேசங்களிலும் இந்தத் தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டம் தொடர்ந்து நடைபெறும்" - என்றார். (இ)

# 20 இலட்சத்துக்கும் மேற்பட்டோருக்கு ஏற்றப்பட்டது கொரோனா தடுப்பூசி



கொழும்பு, ஜூன் 10

இலங்கையில் 2021 ஜனவரி 29ஆம் திகதி முதல் ஜூன் 08 ஆம் திகதி வரை 20 இலட்சத்து 23 ஆயிரத்து 256 பேருக்குக் கொரோனாத் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது. நேற்றும் தடுப்பூசி ஏற்றும் பணி முன்னெடுக்கப்பட்டது.

இலங்கையில் தற்போது ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகமும் அஸ்ட்ராசெனகா நிறுவனமும் இணைந்து உருவாக்கியுள்ள கோவிஷீல்ட், சீனாவின் தயாரிப்பான சினோபார்ம், ரஷ்யாவின் தயாரிப்பான ஸ்புட்னிக் - 5 ஆகிய தடுப்பூசிகள் ஏற்றப்பட்டு வருகின்றன.

இதன்படி கோவிஷீல்ட் தடுப்பூசியின் முதலாவது டோஸ் 9 இலட்சத்து 25 ஆயிரத்து 242 பேருக்கு ஏற்றப்பட்டுள்ளது. இவ்வாறு முதலாவது டோஸைப் பெற்றுக் கொண்டவர்களில் 3 இலட்சத்து 53 ஆயிரத்து 789 பேருக்கு இரண்டாம் டோஸ் ஏற்றப்பட்டுள்ளது.

2021 மார்ச் 26 ஆம் திகதி முதல் ஜூன் 08 ஆம் திகதி வரை 10 இலட்சத்து 33 ஆயிரத்து 28 பேருக்கு சினோபார்ம் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது. 166 பேருக்கு நேற்றுமுன்தினம் இரண்டாவது டோஸ் ஏற்றப்பட்டுள்ளது.

'ஸ்புட்னிக் - 5' தடுப்பூசி ஏற்றும் பணி ஏப்ரல் 30ஆம் திகதி ஆரம்பமானது. ஜூன் 08 ஆம் திகதி வரை 64 ஆயிரத்து 986 பேருக்கு அந்த தடுப்பூசியின் முதலாவது டோஸ் ஏற்றப்பட்டுள்ளது. (இ)

# கம்பளையில் 9 யாசகர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று!

கம்பளை, ஜூன் 10

கம்பளை நகரில் 9 யாசகர்களுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கம்பளை நகரிலுள்ள இ.போ.ச. பஸ் தரிப்பிட வளாகத்திலேயே அதிகளவு யாசகர்கள் தங்கியுள்ளனர்.

இவர்களில் ஒருவருக்கு திடீர் சுகயீனம் ஏற்பட்டதையடுத்து, வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து கம்பளை இ.போ.ச. பஸ்தரிப்பிட வளாகத்திலுள்ள மேலும் 13 யாசகர்கள் நேற்று அன்டிஜன்ட் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். இதில் 8 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்றியிருப்பது கண்டறியப்பட்டது.

தொற்றாளர்களின் சிகிச்சை நிலையங்களுக்குக் கொண்டு செல்வதற்கான நடவடிக்கையை சுகாதார அதிகாரிகள் மேற்கொண்டனர். (இ)



# 10 மனிதாபிமான பணியாளர்கள் ஆப்கானிஸ்தானில் சுட்டு கொலை!

## 12இற்கும் மேற்பட்டோர் படுகாயம் செவ்வாய்க்கிழமை இரவு கொடூரம்!

காபூல், ஜூன் 10

ஆப்கானிஸ்தானில் 'ஹலோ ட்ரெஸ்ட்'டை சேர்ந்த மிதிவெடிகளை அகற்றும் மனிதாபிமான பணியாளர்கள் 10 பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர். மேலும் ஒரு டசினுக்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

செவ்வாய்க்கிழமை இரவு 9.50 மணியளவில் (அந்நாட்டு நேரம்) முகமூடி அணிந்து ஹலோ டிரெஸ்ட் அமைப்பின் வளாகத்துக்குள் சென்ற ஆயுததாரிகள் நித்திரையிலிருந்த மிதிவெடி அகற்றும் பணியாளர்களை நோக்கி சுட்டனர் என்று கூறப்படுகின்றது.

ஆப்கானிஸ்தானின் வடக்கு மாகாணமான பாக்லனில் நடந்த இந்த சம்பவத்தை தலிபான் தீவிரவாதிகள் நடத்தினர் என்று ஆப்கானிஸ்தான் அரச அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆனால், ஹலோ ட்ரெஸ்ட் அமைப்பின் தலைமை நிர்வாக அதிகாரி பி. பி. சிக்கு அளித்த நேர்காணலில், "உள்ளூர் தலிபான்கள் எங்களுக்கு உதவி செய்தனர். தாக்குதல் நடத்தியவர்களை அவர்கள் விரட்டினர்", என்று கூறினார்.

இதேசமயம், அரசாங்கத்தின் குற்றச்சாட்டை தலிபான்கள் உடனடியாக மறுத்துள்ளனர். "பாதுகாப்பற்றவர்கள் மீதான தாக்குதல்களை நாம் கண்டிக்கிறோம். அதை மிருகத்தனமாகக் கருதுகிறோம். தொண்டு நிறுவனங்களுடன் எங்களுக்கு சாதாரண உறவுகள் உள்ளனர். எங்கள் வீரர்கள் ஒருபோதும் இத்தகைய மிருகத்தனமான தாக்குதல்களை நடத்தமாட்டர்கள்", என்று கூறியுள்ளனர்.

மே முதலாம் திகதி முதல் அமெரிக்கா தனது இறுதி படையினரையும் மீளப் பெற தொடங்கியுள்ளது. இந்த நிலையில் ஆப்கானிஸ்தானில் வன்முறைகள் அதிகரித்துள்ளன.

இதனிடையே, பாக்லன் மாகாணத்தின் பல மாவட்டங்களில் தலிபான்களும் இராணுவத்தினரும் கடும் சண்டையில் ஈடுபட்டுள்ளன. (ஐ)

# பிரான்ஸ் ஜனாதிபதியின் முகத்தில் அறைந்த இளைஞர்!

பாரிஸ், ஜூன் 10

பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரோனின் முகத்தில் இளைஞர் ஒருவர் அறைந்த சம்பவம் அந்த நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நேற்று முன்தினம் மாலை (அந்நாட்டு நேரப்படி) இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்தச் செயலை செய்த இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதியை அந்த இளைஞர் அறைந்தமைக்கான காரணம் வெளியாகவில்லை. நீண்டநாள் முடக்கப்பட்டிருந்த பிரான்ஸ் நாட்டின் உணவகங்கள் நேற்று முன்தினம் திறக்கப்பட்ட. இதையொட்டி உணவகங்களின் உரிமையாளர்களை பிரான்ஸ் ஜனாதிபதி நேரில் சந்திக்க சென்றார்.

பாடசாலை ஒன்றுக்கும் சென்ற ஜனாதிபதி அங்கிருந்து காரில் புறப்படத் தயாரான போது அவரைக் காண குவிந்த மக்களை நோக்கி ஜனாதிபதி சென்றார். அப்போதே அங்கு நின்ற இளைஞர் ஜனாதிபதியின் முகத்தில் அறைந்துள்ளார். இதன்போது "மக்ரோனிஸம் வீழ்க" என்றும் அவர் முழக்கமிட்டுள்ளார்.

எதிர்பாராத இந்தத் தாக்குதலில் இருந்து மக்ரோன் தன்னைச் சுதாகரித்துக் கொண்ட போது, அருகே நின்றிருந்த மெய்க்காவலர்கள் விரைந்து அவரைப் பாதுகாப்பாக அப்பால் அழைத்துச்சென்றனர்.

ஜனாதிபதி மீதான இந்தத் தாக்குதலை அங்குள்ள கட்சிகள், பொது அமைப்புகள் பலவும் கண்டித்துள்ளன. (ஐ)





# ஒரே பிரசவத்தில் 10 பிள்ளைகள்: தென்னாபிரிக்க பெண் சாதனை!

கேப்டவுன், ஜூன் 10

தென்னாபிரிக்கா நாட்டை சேர்ந்த பெண் ஒருவர் ஒரே பிரசவத்தில் 10 குழந்தைகளை பெற்றெடுத்தார். இதில், 7 ஆண், 3 பெண் குழந்தைகள் அடங்குவர்.

இதன்மூலம், ஒரே பிரசவத்தில் அதிக பிள்ளைகளை பெற்றெடுத்த பெண் என்ற உலக சாதனையை கோசியம் தாமாரா சித்தோல் (வயது 37) படைத்துள்ளார்.

கர்ப்பமாக இருந்த சித்தோல், பிரிட்டோரியா மருத்துவமனையில் சத்திர சிகிச்சை மூலம் குழந்தைகள் பிறந்தன.

சித்தோல், தனது கர்ப்பம் இயற்கையானது என்றும், அவர் கருவுறுதல் சிகிச்சை மூலம் குழந்தை பெறவில்லை என்றும் கூறி உள்ளார்.

சித்தோலின் 10-குழந்தை பிரசவம் உலக சாதனையாக பார்க்கப்படுகிறது. ஹலிமா சிஸ்ஸே என்ற மாலி நாட்டு பெண் கடந்த மாதம் ஒரே பிரசவத்தில் 9 குழந்தைகளைப் பெற்றெடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கோபம் ஜனநாயகத்தின் வெளிப்பாடு ஆனால், வன்முறைக்கு இடமளியாதீர்!

## தாக்கப்பட்ட பின்னர் மக்ரோன் கருத்து

பாரிஸ், ஜூன் 10

கோபம் ஜனநாயக ரீதியான வெளிப்பாடுதான். ஆனால், வன்முறைக்கு இடமளியாதீர்கள். ஆத்திரத்தையும் முட்டாள்தனங்களையும் ஒன்றாக சேர்த்துக் குழப்பிக்கொள்ளாதீர்கள். பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவல் மக்ரோன் இவ்வாறு நாட்டு மக்களைக் கேட்டிருக்கிறார்.

ஜனாதிபதி மக்ரோனை இளைஞர் தாக்கிய சம்பவத்திற்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசியபோதே இதனைத் தெரிவித்தார்.

மேலும், எதையிட்டும் அச்சமடையவில்லை என்றும் மக்களை நோக்கிய தனது பயணங்களைத் தொடரப் போவதாகவும் அவர் தெரிவித் தார்.

"பிரெஞ்சு மக்கள் எப்போதுமே உறுதியானவர்கள். எல்லாவற்றையும்விட நற்பண்பும் தொண்டு உள்ளமும் கொண்டவர்கள். எதையும் கேட்பதற்கு முன்னர் ஆத்திரத்துடன் முட்டாள்தனங்களைக் கலந்துவிடாதீர்கள்."

"மக்கள் என் மீது கோபத்தை வெளிப்படுத்துகிறார்கள். அச்சமடைகிறார்கள். சில நேரங்களில் நான் செவிமடுக்கிறேன்.இன்னும் சில வேளைகளில் என்னிடம் பதில்கள் இல்லை. சிலநேரங்களில் தவறாக இருக்கிறேன். ஆனால், முட்டாள்தனத்துக்கும் வன்முறைக்கும் ஜனநாயகத்தில் இடமில்லை."- என்றார். (ஐ)


# ஐ.நா. பொது செயலராக மீண்டும் குட்ரெரஸ் தெரிவு

நியூயோர்க், ஜூன் 10

ஐக்கிய நாடுகள் (ஐ. நா. ) பொதுச் சபையின் செயலாளராக மீண்டும் அன்ரனியோ குட்ரெரஸை தெரிவு செய்ய ஐ. நா. பாதுகாப்பு சபையின் உத்தியோகபற்றற்ற கூட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

72 வயதான போர்த்துக்கல் நாட்டின் முன்னாள் பிரதமரான அன்ரனியோ குட்ரெரஸ் ஐ. நா. சபையின் 9ஆவது பொதுச் செயலாளராக கடந்த 2017ஆம் ஆண்டு முதல் பதவி வகித்து வருகிறார். இவரது பதவிக்காலம் இந்த ஆண்டு டிசம்பர் 31ஆம் திகதியுடன் நிறைவடைகிறது.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஐ.நா. பாதுகாப்பு சபை கூட்டத்தில் அன்ரனியோ குட்ரெரஸை மீண்டும் பொதுச்செயலாளராக நியமிப்பது என 193 உறுப்பினர்கள் ஆதரவுடன் பரிந்துரை முன்வைக்கப்பட்டது.



எதிர்வரும் 18ஆம் திகதி நடைபெறவுள்ள ஐ. நா. பொதுச்சபை கூட்டத்தில் முறைப்படி அவர் தெரிவு செய்யப்படவுள்ளார். அவரின் இரண்டாவது பதவிக்காலம் 2026 -ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் திகதி வரை தொடரும். (ஐ)

# மியன்மார் இராணுவத்துக்கு ஐ. நா. சபை கடும் எச்சரிக்கை!

நியூயோர்க், ஜூன் 10

மியன்மாரில் மக்களுக்கு எதிராக தாக்குதல் நடத்தி வரும் இராணுவத்துக்கு ஐக்கிய நாடுகள் (ஐ. நா.) சபை எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து ஐ. நா. வெளியிட்ட அறிக்கையில்,

"மியன்மார் இராணுவத்தால் ஆயிரக்கணக்கான மக்கள் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி இருக்கிறார்கள். கயா மாகாணத்தில் பசியாலும், நோயாலும் மக்கள் இறக்கின்றனர். மியன்மார் இராணுவ நடவடிக்கை காரணமாக ஒரு இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் கயா மாகாணத்திலிருந்து இடம்பெயர்ந்துள்ளனர்.

இடம்பெயர்ந்த மக்கள் காடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். அங்குள்ள மக்களைப் பாதுகாக்க வேண்டும். சொந்த நாட்டு மக்களுக்கு எதிராகத் தாக்குதல் நடத்தும் மியன்மார் இராணுவத்திற்கு அளித்து வரும் உதவிகளை சர்வதேச சமூகம் நிறுத்த வேண்டும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் ஆட்சியை பிடித்த இராணு வத்துக்கு எதிராக மக்கள் நடத்தும் போராட்டங்களில் 800 இற்கும் அதிகமான மக்கள் கொல்லப்பட்டனர் என் பது குறிப்பிடத்தக்கது.(ஐ)



# 10,000 மீற்றர் ஓட்டத்தில் புதிய உலக சாதனை!

ஆம்ஸ்ரர்டாம், ஜூன் 10

நெதர்லாந்தில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிக்கான தகுதிச்சுற்றுப் போட்டியில் 10,000 மீற்றர் தூரத்தை 29:01.03 நிமிடங்களில் கடந்து லெட்சென்பெட் கிடி புதிய உலக சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

"நான் உலக சாதனை படைக்க வேண்டும் என எதிர்பார்த்தார்கள். 29 நிமிடத்துக்குள்ளாக தூரத்தைக் கடக்க அடுத்ததாக முயற்சி செய்வேன்" என கிடி கூறியுள்ளார்.

இவர் கடந்த வருடம் 5,000 மீற்றர் ஓட்டத்தில் உலக சாதனை படைத்திருந்தார். 1993இற்கு பின்னர் 5,000 மீற்றர், 10,000 மீற்றர் என இரு ஓட்டங்களிலும் உலக சாதனை படைத்த வீராங்கனை என்ற பெருமையை கிடி பெற்றுள்ளார். (ஐ)



# பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் மெட்வதேவ் வெளியேற்றம்!

பாரிஸ், ஜூன் 10

உலக தரவரிசையில் இரண்டாவது இடத்தில் இருப்பவரான டெனிஸ் மெட்வதேவ் காலிறுதி ஆட்டத்தில் அதிர்ச்சி தோல்வியை சந்தித்து வெளியேறினார்.

கிராண்ட்ஸ்லம் அந்தஸ்து பெற்ற பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் போட்டி பாரிஸில் நடக்கிறது. இதில் நேற்று முன்தினம் நள்ளிரவு நடந்த காலிறுதி ஆட்டம் ஒன்றில் ரஷ்யாவின் டெனிஸ் மெட்வதேவ், 5ஆம் நிலை வீரரான கிரீஸ் நாட்டின் ஸ்டெபானோஷ் சிட்சிபாஸ் எதிர்கொண்டார்.

இந்த சுற்றில் 6-3 , 7-6 ( 7-3 ), 7-5 என்ற நேர் செற் கணக்கில் மெட்வதேவை வீழ்த்தி அரையிறுதிக்கு தகுதி பெற்றார். இந்த வெற்றியை பெற அவருக்கு 2 மணி 19 நிமிடநேரம் தேவைப்பட்டது.

பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ்

# தமரா, பவ்லியுசென்கோவா அரையிறுதிக்கு நுழைந்தனர்

பாரிஸ், ஜூன் 10

ரஷ்யாவின் பவ்லியுசென்கோவா ஸ்லோவேனியாவின் தமரா ஷிடன்செக் ஆகியோர் அரையிறுதிக்கு முன்னேறினர்.

பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸின் காலிறுதி சுற்றில் நேற்று முன்தினம் இரவு நடந்த காலிறுதி ஆட்டங்கள் நடந்தன.

இதில் ஓர் ஆட்டத்தில், ரஷ்யாவின் பவ்லியுசென்கோவா கஸகஸ்தானின் எலனா ரிபாகினாவை எதிர்கொண்டார். முதல் செற்றை ரிபாகினா 7 - 6 (7-2) என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றார்.

எனினும் அடுத்த இரு செற்களையும் 6 -2, 9 - 7 என்ற கணக்கில் பவ்லியுசென்கோவா வென்று அரையிறுதிக்கு முன்னேறினார்.

இதேபோன்று மற்றோர் ஆட்டத்தில் ஸ்லோவேனியாவின் ஷிடன்செக், ஸ்பெயினின் பவுலா படோசாவை எதிர்கொண்டார்.

முதல் செற்றை 7 - 5 என்ற கணக்கில் வென்ற ஷிடன்செக் இரண்டாவது செற்றை 4 -6 என்ற கணக்கில் இழந்தார். ஆனாலும், மூன்றாவது செற்றை 8 - 6 என்ற கணக்கில் வென்று அரையிறுதிக்கு முன்னேறினர். (ஐ)



# உலகின் சிறந்த தொடராக இந்தியா - ஆஸி. டெஸ்ட்!



2020-21 ஆம் ஆண்டில் நடந்த முடிந்த போர்டர் - கவாஸ்கர் கிண்ணத்துக்கான இந்தியா - அவுஸ்திரேலியா டெஸ்ட் தொடர் சிறந்த தொடருக்கான அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது.

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டி அடுத்த மாதம் நடக்கவுள்ளது. இந்நிலையில் இதுவரை நடந்த டெஸ்ட் தொடர்களில் மிகச்சிறந்த டெஸ்ட் தொடர் எது என்று சர்வதேச கிரிக்கெட் சபை சமூகவலைதளம் மூலம் நடத்தப்பட்டது.

இதற்காக, 144 ஆண்டு கால டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் பரபரப்பாகவும், த்ரில்லிங்காகவும் அமைந்த 16 தொடர்களை அடையாளம் கண்டு வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. இதில் 1882, 1932 ஆம் ஆண்டுகளில் நடந்த தொடர்களும் இதில் இடம்பிடித்தன.

இந்தியா - அவுஸ்திரேலியா (2020/21), இந்தியா - பாகிஸ்தான் டெஸ்ட் தொடர்கள் வாக்குகள் அடிப்படையில் கடுமையாகப் போட்டியிட்டன. 70 இலட்சம் பேர் வாக்களித்த இந்தத் தெரிவில், இறுதியில் இந்தியா - அவுஸ்திரேலியா (2020/21) தொடர் தெரிவானது.

4 போட்டிகள் கொண்ட இந்தத் தொடரை இந்தியா 2-1 என்ற கணக்கில் வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது.

# இங்கிலாந்துடனான டெஸ்ட் வில்லியம்ஸன் சந்தேகம்!

லண்டன், ஜூன் 10

இங்கிலாந்து - நியூஸிலாந்து இரண்டாவது டெஸ்ட் இன்று ஆரம்பமாகிறது. இதில் நியூஸிலாந்து அணியின் தலைவர் கேன் வில்லியம்ஸன் விளையாடுவாரா என்பது சந்தேகமே.

அவருக்கு இடது முழங்கையில் ஏற்பட்ட காயம் கவலை அளிக்கும் விதமாக உள்ளது. எனினும், இரண்டாவது டெஸ்டில் அவர் விளையாடுவாரா இல்லையா என்பது குறித்து இன்றே முடிவு செய்யப்படும் என்று அந்த அணியின் பயிற்றுவிப்பாளர் ஸ்டீட் தெரிவித்துள்ளார்.

இதனிடையே அந்த அணியின் சுழல்பந்து வீச்சாளர் சாண்ட்னர் காயம் காயம் காரணமாக விளையாட மாட்டார் என்றும் அவர் கூறினார். (ஐ)



இங்கிலாந்துக்கு எதிரான தொடர்

# இலங்கை அணியில் மூன்று புதுமுகங்கள்





கொழும்பு, ஜூன் 10

இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள், இருபது - 20 தொடர்களில் 24 பேர் கொண்ட அணி நேற்று பயணமானது. இதில் மூன்று வீரர்கள் புதிதாக இடம் பிடித்துள்ளனர்.

பங்களாதேஷ் சுற்றுப் பயணத்தில் பங்கெடுத்த அஸன் பண்டாரா தவிர அனைத்து வீரர்களும் இந்த சுற்றுப் பயணத்தில் தங்களுக்கான இடத்தை தக்க வைத்துக் கொண்டுள்ளனர்.

இதேநேரம், சரித் அசலங்க, தனஞ்சய லக்ஷான் மற்றும் இஷான் ஜெயரத்ன பிரவீன் ஜெயவிக்ரம ஆகியோரும் அணியில் புதிதாக இடம் பிடித்துள்ளனர்.

**அணி விவரம்:**

குசல் ஜனித் பெரேரா (தலைவர்), குசல் மெண்டிஸ், தனுஷ்க குணதிலக்க, அவிஷ்க பெர்னாண்டோ, பதும் நிஷங்க, நிரோஷன் டிக்வெல்ல, தனஞ்சய டிசில்வா, ஒஸத பெர்னாண்டோ, சரித் அசலங்க, தசுன் சானக்க, வனிந்து ஹசரங்க, ரமேஷ் மெண்டிஸ், சமிக கருணாரத்ன, தனஞ்சய லக்ஷன், இஷான் ஜெயரத்ன, துஷ்மந்த சாமர, இசுரு உதான, அஷித பெர்னாண்டோ, நுவான் பிரதீப், பினுர பெர்னாண்டோ, ஷிரான் பெர்னாண்டோ, லக்ஷன் சந்தகன், அகில தனஞ்சய, பிரவீன் ஜெயவிக்ரம. (ஐ)

## மரண அறிவித்தல்கள்

தோற்றம்
05
-
06
-
1957



மறைவு
01
-
06
-
2021

### இராசையா குகதாசன்

யாழ். கரவெட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா குகதாசன் 01.06.2021 செவ்வாய்க்கிழமை அன்று லண்டனில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற வல்லிபுரம் இராசையா – நல்லதம்பி பொன்னம்மா தம்பதியரின் ஏக புத்திரரும், கணபதிப்பிள்ளை சின்னத்துரை – சின்னத்தம்பி சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், தங்கமலர் அவர்களின் அன்புக் கணவரும், அசோக்குமார், சிறீகாந்த், செந்தூரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், கார்த்திகா அவர்களின் அன்பு மாமனாரும், ஆயுஷன் அவர்களின் பாசமிகு பேரனும் ஆவார்.


*பார்வைக்கு*
Saturday, 12 Jun 2021 3:00 PM - 7:00 PM
Angel Funeral Care 188 Alexandra Ave, Harrow HA2 9BN, United Kingdom
*கிரியை*
Sunday, 13 Jun 2021 8:30 AM - 11:00 AM
Angel Funeral Care 188 Alexandra Ave, Harrow HA2 9BN, United Kingdom
*தகனம்*
Sunday, 13 Jun 2021 12:00 PM - 12:30 PM
Hendon Cemetery & Crematorium Holders Hill Rd, London NW7 1NB, UK

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு**
**அசோக்குமார் (மகன்) 00447447478992**
**செந்தூரன் (மகன்) 00447446865913**
**கார்த்திகா (மருமகள்) 00447462132601**

**தகவல்: குடும்பத்தினர்.**

தோற்றம்
08
-
05
-
1963



மறைவு
06
-
06
-
2021

### நடேசன் முகுந்தன்

யாழ். மீசாலையை பிறப்பிடமாகவும், ஜேர்மனி Aachen efiu வசிப்பிடமாகவும் கொண்ட நடேசன் முகுந்தன் 06-06-2021 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற நடேசன் – தெய்வானைபிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கந்தசாமி – நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், திலகவதியின் பாசமிகு கணவரும், றஜீவன், றட்சிகா, றாகீசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், திருவேணி(இலங்கை), ரவி(நோர்வே), கௌரிவேணி(ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரரும்,சுபாகரன், குணராசா, காலஞ்சென்ற ரவீந்திரபிரசாத், திலகேஸ்வரி, கலைரூபி ஆகியோரின் அன்பு மைத்துனரும்,திவானுஜன், சுபானுஜன், ஹம்சிகா, ஆதீஸ்யன் ஆகியோரின் அன்பு மாமனாரும்,துபிஷன், விதுஷன், வர்ணிகா, மகிமா, மானசா, மகிந்தன், மிதுன் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு :**
**ரவி - சகோதரன் +4790910715**

**தகவல்: குடும்பத்தினர்.**

# பல்கலைக்கழகமாக அறிவிக்கப்பட்டது யாழ். பல்கலையின் வவுனியா வளாகம்

## கல்வி அமைச்சு விசேட வர்த்தமானி

*கொழும்பு, ஜூன் 10*

*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தைப் புதிய பல்கலைக்கழகமாக அறிவித்து கல்வி அமைச்சு விசேட வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளது.*

*பல்கலைக்கழக சட்டங்களுக்கமைய 2021ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதியில் இருந்து அமுலுக்கு வரும் வகையில் கல்வி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸின் கையெழுத்துடன் இந்த வர்த்தமானி வெளியாகியுள்ளது.*

*'இலங்கை, வவுனியா பல்கலைக்கழகம்' என்ற பெயரில் புதிய பல்கலைக்கழகம் அழைக்கப்படும் என்றும், இதன்படி யாழ். பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகம் ஜூலை 31 ஆம் திகதியுடன் இல்லாமல் செய்யப்படும் என்றும் வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*புதிய வவுனியா பல்கலைக்கழகம் வியாபார கற்கைகள், பிரயோக விஞ்ஞானம், தொழில்நுட்பவியல் கற்கைகள் ஆகிய பீடங்களை கொண்டிருக்கும் என்றும் கல்வி அமைச்சர் வர்த்தமானியில் குறிப்பிட்டுள்ளார். (இ)*

# இணையத்தில் விளம்பரம் செய்து 15 வயது சிறுமியை விற்றவர் கைது

*கொழும்பு, ஜூன் 10*

*இணையத்தில் விளம்பரம் செய்து, 15 வயது சிறுமியை விற்ற நபர் ஒருவர் கல்கிசைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.*

*35 வயதான சந்தேகநபர் கல்கிசை பிரதேச தொடர் மாடி வீடொன்றை வாடகைக்கு எடுத்து, குறித்த சிறுமியை அங்கே தடுத்து வைத்திருந்தார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*குறித்த சிறுமியின் புகைப்படத்துடன் இணையத்தளத்தில் செய்யப்பட்ட விளம்பரத்துக்கு அமைய, நபரொருவருக்கு அச்சிறுமி விற்கப்பட்டுள்ளார்.*

*இவ்வாறு விற்பனை செய்யப்பட்ட சிறுமி, தெல்கொட பிரதேசத்தை சேர்ந்தவர் என்றும், சிறுமியின் தாயாரிடமிருந்தே, சந்தேகநபர் சிறுமியைப் பெற்று கல்கிசைப் பிரதேசத்துக்கு அழைத்து வந்துள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.*

*சந்தேக நபர் கடந்த மூன்று மாதங்களில் சிறுமியை பல்வேறு நபர்களுக்கு விற்றுள்ளார். அத்துடன், பாலியல் நோக்கங்களுக்காக சிறுமியை யார் யார் வாங்கினர் என்பது குறித்து பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.*

*இதனிடையே, சந்தேகநபர் மொரட்டுவை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு நீதிமன்ற உத்தரவின்படி ஜூலை 8ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.*

*மேலும், இந்தச் சம்பவம் தொடர்பில், சிறுமியின் தாயாரிடம் பொலிஸார் வாக்கு மூலங்களைப் பதிவு செய்துள்ளனர். (இ)*

# ரஜீவ் யசிறு குருவிட்டகே பிணையில் விடுவிப்பு

*கொழும்பு, ஜூன் 10*

*சமூக வலைதளங்களில் போலிச் செய்திகளைப் பரப்பிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இலங்கை தகவல் தொழில்நுட்பச் சங்கம் எனும் அமைப்பின் தலைவர் ரஜீவ் யசிறு குருவிட்டகே பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.*

*ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான சரீர பிணையில் அவரை விடுதலை செய்வதற்கு கொழும்பு பிரதம நீதிவான் நேற்று உத்தரவிட்டார்.*

*ஜனாதிபதி செயலகம் அல்லது ஏனைய அரச நிறுவனங்களின் உத்தியோகபூர்வ இணையதளங்கள் சந்தேகநபரால் ஊடுறுவப்பட்டுள்ளதா? என நேற்றைய வழக்கு விசாரணையின் போது விசாரணை அதி காரிகளிடம் நீதிவான் வினவினார்.*

*ஜனாதிபதி செயலகம், வெளிவிவகார அமைச்சு உள்ளிட்ட அரச நிறுவனங்களின் இணையத்தளங்கள் ஊடுருவப்பட்டுள்ளதாக சந்தேகநபரால் தயாரிக்கப்பட்ட அறிக்கை சமூக வலைதளங்களில் பகிரப்பட்டதை அடுத்தே நேற்று முன்தினம் அவர் கைதுசெய்யப்பட்டிருந்தார். (இ)*



## அபே ஜனபல கட்சியில் இருந்து
# பாராளுமன்றம் செல்ல தயாராகும் ஞானசாரர்

*கொழும்பு, ஜூன் 10*

*அபே ஜனபல கட்சியின் பாராளுமன்ற ஆசனத்துக்கு பொதுபலசேனா அமைப்பின் தலைவர் ஞானசார தேரரை நியமிக்கும் திட்டம் இருக்கின்றது என அக்கட்சி தெரிவித்துள்ளது.*

*அபே ஜனபல கட்சிக்குக் கிடைத்த தேசியப் பட்டியலில் அத்துரலிய ரத்ன தேரர் பாராளுமன்ற சென்றுள்ள நிலையில், ஒப்பந்தத்தின்படி அவரது பதவிக் காலம் ஜூலை மாதம் 5 ஆம் திகதியுடன் முடிவடைகின்றது என அபே ஜனபல கட்சி குறிப்பிட்டுள்ளது.*

*பொதுத் தேர்தலில் அபே ஜனபல கட்சிக்கு ஒரு தேசியப் பட்டியல் பாராளுமன்ற ஆசனம் கிடைத்ததைத் தொடர்ந்து, யாரைப் பாராளுமன்றம் அனுப்புவது என்ற உட்கட்சி முரண்பாடு ஏற்பட்டது.*

*இறுதியில், அத்துரலியே ரத்ன தேரர் 6 மாதங்களுக்கு பாராளுமன்றம் செல்வதற்கு இணக்கம் காணப்பட்டது.*

*அத்துரலியே ரத்ன தேரருக்கு வழங்கப்பட்ட 6 மாத காலம் எதிர்வரும் ஜூலை மாதம் 5ஆம் திகதியுடன் நிறைவடைவதைத் தொடர்ந்து, ஞானசார தேரர் பாராளுமன்றம் செல்லவுள்ளார் என்று அபே ஜனபல கட்சி தெரிவித்துள்ளது.*

*ஞானசார தேரரின் பெயரைத் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு முன்மொழிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் தெரியவருகின்றது. (இ)*

# யானையின் உடல் மீட்பு!

*திருகோணமலை, ஜூன் 10.*

*திருகோணமலை மாவட்டம், தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்மெட்டியாவ - ஈச்சங்குளம் காட்டுப் பகுதியில் யானையொன்று உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.*

*காட்டுப் பகுதியை அண்மித்த பகுதியில் எட்டு அடி உயரமான ஆண் யானையே இவ்வாறு உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.*

*இரண்டரை அடி நீளம் கொண்ட தந்தத்தை உடைய இந்த யானை குறித்த பகுதியில் சில நாட்களாகவே நடமாடியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.*

*கடந்த இரு வாரங்களுக்கு முன்பு குறித்த யானை, பன்றிக்கு வைத்த வெடிபொருளை உட்கொண்டமையால் உணவு உண்ண முடியாது உயிரிழந்திருக்கலாம் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.*

*சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வனஜீவராசி அதிகாரிகளுடன் இணைந்து தம்பலகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ)*

## கோவிட்...

உயிரிழந்த நிலையில் அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்களால் பஸ்ஸுக்கு கற்கள் வீசப் பட்டன. அதனால், பஸ்ஸில் பாதுகாப் புக்கு பயணித்த இராணுவம் கற்கள் எறிந் தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முற் பட்டதால் குழப்பநிலை ஏற்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்று மாலை 5 மணி யளவில் இடம்பெற்றது.

மட்டுவில் சந்திரபுரன் வட்டன் வேலா யுதம் (வயது-70) உயிரிழந்தார்.

தென்னிலங்கையிலிருந்து 5 பேருந்து களில் கோவிட்-19 நோய்த்தொற்றாளர் கள் அழைத்து வரப்பட்டுள்ளனர்.

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்துக்கு அண்மையாக சைக்கிளில் பயணித்த விவசாயி ஒருவரை பேருந்து ஒன்று மோதியதில் அவர் வீதியில் சாய்ந் தார்.

சுயநினைவற்ற அவர் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப் பட்ட நிலையில் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நிலையில் அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்களால் பஸ்களுக்கு கற்கள்

## பயண தடைக்கு...

தற்போது நடைமுறையில் உள்ள பய ணத்தடை எதிர்வரும் 14ஆம் திகதிக்கு பின்னரும் நீடிக்கப்படுமா என கேள்வி எழுப்பப்பட்டபோதே இவ்வாறு தெரி வித்தார்.

கம்பஹா வைத்தியசாலையில் நிலை மைகளை அவதானிப்பதற்காக சென்ற போது அங்கு வைத்து ஊடகவியலா ளர்களின் கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள் ளார்.

ஜூன் 14 வரையான கோவிட் தரவு களை அடிப்படையாக கொண்டு எதிர் வரும் காலத்தில் நாட்டில் பயணக் கட் டுப்பாடுகளை தொடர்ந்து நீடிப்பதா என் பதை அரசாங்கம் முடிவு செய்யும் என்று அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் கடந்த வாரத்தை விட இவ்வாரம் தொற்றாளர்களின் எண் ணிக்கையிலும் மரணங்களின் எண்ணிக் கையிலும் அதிகரிப்பை காணக்கூடிய தாக இருப்பதாகவும் இராஜாங்க அமைச் சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே மேலும் தெரிவித்திருந்தார்.

## எதிர்ப்புப்...

போட்ஸ்ஹைம் நகரில் அமைந்துள்ள தடுப்பு முகாமிலிருந்து இவர்கள் நேற்று நண்பகல் பலத்த பொலிஸ் பாதுகாப் புடன் பிராங்போர்ட் கொண்டுவரப்பட் டனர்.

ஜேர்மனியிலிருந்து ஈழத்தமிழ் அகதி கள் நாடுகடத்தப்படுவதை எதிர்த்து பிரே மன் மனித உரிமை அமைப்பும் ஏனைய சில அமைப்புகளும் இணைந்து ஜேர்மனி யில் போட்ஸ்ஹைம் நகரில் அமைந்துள்ள தடுப்பு முகாமுக்கு எதிரில் கடந்த திங்கள் மாலையிலிருந்து ஒரு தொடர் போராட் டத்தை நடத்தியிருந்தார்கள்.

இந்தக் கடுமையான போராட்டத்துக்கு மத்தியில் பொலிஸ் பாதுகாப்புடன் வாக னம் ஒன்று தடுப்பு முகாமுக்கு உள்ளே வந்து அகதிகளை ஏற்றிக் கொண்டு விமான நிலையம் சென்றதாகத் தெரிவிக் கப்படுகின்றது. அந்த வாகனத்தைச் செல்ல விடாமல் தடுக்க ஆர்ப்பாட்டக் காரர்கள் முயன்ற போதிலும், கடுமையான பொலிஸ் பாதுகாப்புடன் வாகனம் வெளியேறியது.

பிராங்போர்ட் விமான நிலையத்தி லும் பெருந்தொகையான தமிழர்களும், ஜேர்மன் நாட்டவர்கள் சிலரும் இணைந்து எதிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்த நிலையில் புகலிடக் கோரிக்கை நிராகரிக் கப்பட்டவர்கள் நேற்றிரவு விஷேட விமா னம் ஒன்றின் மூலம் நாடு கடத்தப்பட்ட தாக பிராங்போர்ட் செய்திகள் தெரிவிக் கின்றன.

இதேவேளையில், நாடு கடத்தப்படு வதற்காகத் தடுத்துவைக்கப்பட்டிருந்த வர்களில் நேற்று முன்தினம் ஒருவரும் நேற்று ஒருவருமாக இருவர் விடுதலை செய்யப்பட்டனரெனவும் தெரிவிக்கப் படுகின்றது.

வீசப்பட்டன. அதனால் பஸ்களில் பாது காப்புக்காகப் பயணித்த இராணுவத்தி னர் கற்கள் வீசியோர் மீது நடவடிக்கை எடுக்க முறப்பட்டனர்.

மேலும் இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் சம்பவ இடத்துக்கு அழைக் கப்பட்டனர். கற்கள் வீசினர் என்ற குற்றச்சாட்டில் நால்வரை பொலிஸார் அழைத்துச் சென்றுள்ளனர்.

சம்பவத்தையடுத்து விபத்துக்குள்ளான பேருந்து தவிர்ந்த ஏனைய 4 பஸ்களும் அங் கிருந்து அனுப்பப்பட்டன. (அ-03)

## 25 சிறுவர்கள்...

தில் நேற்று 502 பேரின் பி.சி.ஆர். மாதிரி கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன.

இதில், சாவகச்சேரியில் 5 பேரும், சங்கானையில் 25 பேரும், உடுவிலில் 12 பேரும், யாழ். மாநகரில் 13 பேரும் தொற் றாளர்களாக அடையாளம் காணப்பட் டனர். மானிப்பாய் பிரதேச வைத்திய சாலையில் 3 பேரும், அளவெட்டி, பண் டத்தரிப்பு பிரதேச வைத்தியசாலைகளில் தலா ஒருவரும், பருத்தித்துறை, தெல்லிப் பழை ஆதார வைத்தியசாலைகளில் தலா ஒருவரும் தொற்றாளர்களாக இனங்காணப் பட்டனர்.

இதேபோல, வவுனியா மாவட்டத் தில் 5 சிறுவர்கள் உட்பட 27 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 2 சிறுவர் கள் 7 பேரும் தொற்றாளர்களாக அடை யாளம் காணப்பட்டனர்.

இதேபோன்று, யாழ். பல்கலைக்கழக ஆய்வுகூடத்தில் 233 பேரின் பி. சி. ஆர். மாதிரிகள் சோதனைக்கு உட்படுத்தப் பட்டன. இதில், 8 சிறுவர்கள் உட்பட 44 பேர் தொற்றாளர்களாக இனங்காணப் பட்டனர்.

யாழ்ப்பாணம் மாநகரில் 4 சிறுவர்கள் உட்பட 9 பேரும், தெல்லிப்பழையில் இரு சிறுவர்கள் உட்பட 28 பேரும், நல்லூ ரில் ஒரு சிறுவன் உட்பட 6 பேரும், சாவகச்சேரியில் 15 வயது சிறுமியுமாக 44 பேர் தொற்றாளர்களாக இனங்காணப் பட்டனர். (ஐ)

## மட்டுவில்...

தெரிவித்துள்ளனர்.

தென்னிலங்கையிலிருந்து தனிமைப் படுத்தலுக்காக மக்களுடன் பயணித்த ஐந்து பஸ்களில் ஒரு பஸ் வீதியில் சைக் கிளில் பயணித்துக்கொண்டிருந்த மட்டு வில் சந்திரபுரம் பகுதியைச் சேர்ந்த வேலா யுதம் (வயது-70) என்பவர் மீது மோதிய தால் அவர் உயிரிழந்தார்.

சம்பவத்தை அடுத்து அங்கு திரண்ட சிலர் பஸ்கள் மீது கற்களை வீசித் தாக்கு தல் மேற்கொண்டனர்.

அதனை அடுத்து பஸ்ஸில் பயணித் தவர்களால் இராணுவத்தினருக்கு தகவல் வழங்கப்பட்ட நிலையில் இராணுவத்தி னர் அங்கு சென்று நிலைமையை கட்டுப் படுத்த துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண் டதாகவும் அதன் பின்னரேயே நிலைமை கட்டுக்குள் வந்ததாகவும் சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, தாக்குதல் நடத்தினார் கள் என்ற குற்றச்சாட்டில் ஐவர் கைது செய்யப்பட்ட சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தாகவும் அவர்கள் கூறினர்.

தொடர்ந்தும் விசாரணைகள் இடம் பெறுவதால் மேலும் சிலர் கைது செய் யப்படக்கூடும் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது.

## ஜூன் 22 இல்...

ஐ.தே.கவின் தேசியப் பட்டியல் எம். பியான ரணில் விக்கிரமசிங்கவை நியமிப் பதற்கு அக்கட்சியின் செயற்குழு அனுமதி வழங்கியுள்ளது. இந்நிலையில் ரணிலின் பெயரை தேர்தல் ஆணைக்குழுவுக்கு அனுப்புவதற்கு இன்னும் ஒரு வாரத்துக் குள் ஐ.தே.க. நடவடிக்கை எடுக்கவுள்ளது. அதன்பின்னர் அப்பெயர் வர்த்தமானியில் வெளியாகும்.

ஜூன் 22 ஆம் திகதி பாராளுமன்றம் கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அவ் வாறு கூடும் பட்சத்தில் அன்றைய தினம் ரணில் சத்தியப்பிரமாணம் செய்வார். (இ)

# ஆட்சிக் கவிழ்ப்புக்காக அமெரிக்கர்கள் ஊடுருவலா?

## இராணுவத் தளபதி பதிலளிக்க மறுப்பு

கொழும்பு, ஜூன் 10

அமெரிக்காவின் யு.எஸ்எயிட் நிறு வனத்தால் இலங்கையில் நடைமுறைப் படுத்தும் திட்டத்தில் பங்கேற்கும் அதி காரிகள் என்ற பெயரில், அமெரிக்காவின் ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகள் குழு இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக செய்திகள் வெளியாகியிருந்தன. இது தொடர்பில் இராணுவத் தளபதி சவேந் திர சில்வாவிடம் வினவியபோது, அது தொடர்பில் தன்னால் பதிலளிக்க முடி யாது என்று குறிப்பிட்டார்.

கொரோனாக் கட்டுப்பாட்டு நட வடிக்கைக்கான அமெரிக்காவின் உதவிப் பொருள்களுடன் கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கு அமெரிக்க விமானம் 5 நாள்களுக்கு முன்னர் வந்திருந்தது. அந்த விமானத்தில் 4 அமெரிக்கர்களும் வந்தி ருந்தனர். அவர்கள் சுற்றுலா விசாவில் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் குழுவினர் இலங்கைக்கு வரு கைத் தருகின்றமை தொடர்பில் பாது காப்பு அமைச்சுக்கோ அல்லது வெளி விவகார அமைச்சுக்கோ அறிவிக்கப்பட வில்லை என்பது விசாரணைகளின் ஊடாக தெரியவந்துள்ளது.

வெளிவிவகார அமைச்சும் இந்த விடயம் தொடர்பில் விசாரணைகளை நடத்தி வருகின்றது. மியன்மாரில் இடம் பெற்ற இராணுவ சூழ்ச்சி நடவடிக்கை களின்போது, மியன்மாரில் இருந்த அமெரிக்க ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி ஒருவரும், இந்தக் குழுவில் இடம்பிடித்துள்ளமை விசாரணைகளின் ஊடாக தெரிய வந்துள்ளது.

அதேவேளை, குறித்த நபர், சுற்றுலா விசாவின் ஊடாக, பல்வேறு சந்தர்ப்பங் களில் இலங்கைக்கு வருகைத் தந்துள்ள மையும் தெரியவந்துள்ளது.

இந்த விடயங்கள் தொடர்பில் எழுப் பப்பட்ட கேள்விக்கே இராணுவத் தள பதி பதிலளிக்க மறுத்துள்ளார். (இ)

# ஓர் ஆசனத்தை வைத்துக்கொண்டு ரணில் ஜனாதிபதியாகவும் முடியும்

## அரசுக்கு ஐ.தே.க. பதிலடி

கொழும்பு, ஜூன் 10

ஓர் ஆசனத்தை வைத்துக்கொண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவால் ஜனாதிபதியா கவும் முடியும் என்று அக்கட்சியின் தவி சாளர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

இணையவழியில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“பாராளுமன்றத்தில் 40 ஆசனங்களை வைத்துக்கொண்டு பிரதமரான ரணில் விக்கிரமசிங்க, அரசியல் விஞ்ஞானத்துக் கேற்ப ஓர் ஆசனத்தால் பிரதமராகி, பின்னர் ஜனாதிபதியாகவும் முடியும்.

அனைவரையும் ஒன்றிணைத்துக் கொண்டு புதிய அரசியல் பயண மொன்றை ஆரம்பிப்பதற்காகவே ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றம் செல்கின் றார். எதிரணியினரைப் பிளவுபடுத்து வது அவரின் நோக்கம் அல்ல. இதை அரச தரப்பினர் கவனத்தில்கொள்ள வேண்டும். அவர்கள் வாய்க்கு வந்த



மாதிரி உளறக்கூடாது” - என்றார்.

“ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத் துக்கு வந்தவுடன் ஐக்கிய மக்கள் சக்தி யின் 15 உறுப்பினர்கள் அவருடன் இணைந்துகொள்ளவுள்ளனர். அடுத்த நாடாளுமன்ற அமர்வில் அவரே எதிர்க் கட்சித் தலைவர் என்பதை எதிரணியினர் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும்“ என்று அமைச்சர் மஹிந்தானந்த அளுத்க மகே நேற்றுமுன்தினம் பாராளுமன்றத் தில் உரையாற்றும்போது தெரிவித்திருந் தார்.

இதற்கு நேற்றுப் பதிலளிக்கும்போதே ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன மேற்கண்டவாறு கூறினார். (இ)

## முழுநேரப்...

குறித்த சங்கம் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளது.

நாட்டின் மருத்துவமனைகளில் தொடர்ந்தும் கொரோனா தொற்றாளர் களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின் றது எனவும், மருத்துவமனைகளால் ஈடு கொடுக்க முடியாத நிலை ஏற்படலாம் எனவும் குறித்த சங்கம் எச்சரித்துள்ளது.

“கொரோனா வைரஸ் பரவல் 12 வீதத் தால் அதிகரித்துள்ளது. கொரோனா மர ணங்கள் 28 வீதத்தால் உயர்வடைந்துள் ளது.

இதனைக் கட்டுப்படுத்தும் நோக்கில் தற்போது அமுலில் பயணக் கட்டுப் பாட்டை மேலும் கடுமையாக நடை முறைப்படுத்துவது அவசியமாகும்” என் றும் விசேட மருத்துவ நிபுணர்கள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

கொரோனா வைரஸ் தடுப்பூசி திட் டத்தை முறையாக நடைமுறைப்படுத்து வதன் அவசியத்தையும் தட்டுப்பாடு இன்றி தடுப்பூசிகளை விநியோகிக்கத் தேவை யான வேலைத் திட்டங்களின் தேவை யையும் ஜனாதிபதிக்கான கடிதத்தில் சுட் டிக்காட்டப்பட்டுள்ளது. (இ)

## மஸ்தான்...

மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜென் பரிசோதனையில் அவருக்கு தொற்றுறுதி செய்யப்பட்டதாக கூறப்படுகிறது.

இதனையடுத்து, அவர் தற்போது தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட் டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரி வித்துள்ளனர்.

எவ்வாறாயினும், இன்று அவருக்கு பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப் படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 2,735 பேருக்கு...

களின் மொத்த எண்ணிக்கை ஒரு இலட் சத்து 80 ஆயிரத்து 427 ஆக உயர்வடைந் துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்று காரணமாக வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்களின்வற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 31 ஆயிரத்து 125 ஆக அதிகரித்துள்ளது.

ஈழநாடு
Eelanadu

கப்பல் விபத்தால் சமுத்திரப் பாதிப்பு:

## ஆரம்பகட்ட நட்டஈடு பெறுவதற்கு பாதுகாப்பு அதிகார சபை முடிவு

கொழும்பு, ஜூன் 10

கொழும்புத் துறைமுகத்திற்கு அருகில் தீ விபத்துக்குள்ளான 'எக்ஸ் - பிரஸ் பேர்ல்' கப்பலால் ஏற்பட்டுள்ள சமுத்திர பாதிப்புக்காக 19 மில்லியன் டொலர்களை ஆரம்பகட்ட நட்டஈடாகக் கப்பல் நிறுவனத்திடம் இருந்து கோருவதற்கு இலங்கை கரையோரப் பாதுகாப்பு அதிகார சபை தீர்மானித்துள்ளது.

இது குறித்து சட்டமா அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என கரையோரப் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் தர்ஷினி லஹந்தபுர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"எக்ஸ் - பிரஸ் பேர்ல்" கப்பல் விபத்தால் ஏற்பட்டுள்ள சமுத்திரப் பாதிப்பை இலகுவில் சீர்செய்ய முடியாது. இப்போது சமுத்திரப் பாதிப்பு குறித்த ஆய்வுகளை நாம் முன்னெடுத்துள்ள நிலையில் ஆரம்பகட்டமாக ஒரு தொகை நட்டஈட்டைப் பெற்றுகொள்ள எதிர்பார்க்கின்றோம்.

கப்பலால் கடலில் ஏற்பட்டுள்ள விளைவுகளைச் சீர்செய்ய நீண்டகாலம் எடுக்கும். அதுமட்டுமல்ல கடலில் கலக்கப்பட்டுள்ள பிளாஸ்டிக் துண்டுகளை முழுமையாக அகற்றுவது என்பது இலகுவான காரியமும் அல்ல. அவை கடலில் சகல பகுதிகளுக்கும் செல்லும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இந்தக் கப்பலில் கொண்டுவரப்பட்ட அச்சுறுத்தலான பொருட்கள் என்னவென்பது இன்னமும் வெளிப்படவில்லை. கப்பலில் இருந்த 80 வீதமான பொருட்கள் கடலில் கலந்துள்ளன. அத்துடன் ஆயிரத்துக்கும் அதிகமான கொள்கலன்கள் கடலில் மூழ்கியுள்ளன. அவற்றை அகற்றுவதற்கு எந்தவித முயற்சியும் எடுக்கப்படவில்லை. கப்பலில் எரிபொருள் இருக்கின்றது எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இவை ஆபத்தானது" - என்றார். (இ)

# எமது கடல்பிராந்தியத்தை பாதுகாக்க ஒன்றிணைந்த கட்டமைப்பு அவசியம்!

இந்திய தூதுவர் கோபால் பாக்லே



கொழும்பு, ஜூன் 10

**எமது கடற்பிராந்தியத்தைப் பாதுகாப்பதற்கு அவசியமான கட்டமைப்புக்களையும் ஒன்றிணைந்து உருவாக்குவதும் அதன் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதும் இன்றியமையாத தாகும். இதுவிடயத்தில் இலங்கையும் இந்தியாவும் மிக நெருங்கிச் செயலாற்ற வேண்டியதன் அவசியத்தை அண்மையில் நியூ டயமன்ட் கப்பல் மற்றும் எம்.வி.எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் ஏற்பட்ட அனர்த்தம் தெளிவாகப் புலப்படுத்தியுள்ளது என்று இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே தெரிவித்துள்ளார்.**

இலங்கை முதலீட்டு சபை, இலங்கை வர்த்தகப்பேரவை மற்றும் கொழும்பு பங்குச்சந்தை ஆகியவற்றின் ஒன்றிணைந்த ஏற்பாட்டில் திங்கட்கிழமை ஆரம்பமான இலங்கை முதலீட்டுப்பேரவை மாநாட்டின் மூன்றாம் நாள் நிகழ்வுகள் நேற்று நடைபெற்றன.

இதில், நாடுகளுக்கு இடையிலான முதலீட்டு வாய்ப்புக்கள் தொடர்பான கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், இலங்கையானது அதன் பிரஜைகள் அனைவருக்கும் நல்வாழ்வையும் சுபீட்சத்தையும் பெற்றுக்கொடுப்பதற்கான உறுதிப்பாட்டைக் கொண்டிருக்கிறது என்பது இந்த மாநாட்டின் மூலம் வெளிப்பட்டுள்ளது. இந்த மாநாட்டின் முதல்நாள் நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஏனைய நாடுகள் இலங்கையில் முதலீடு செய்வதற்கு அவசியமான வசதிவாய்ப்புக்கள் ஏற்படுத்திக்கொடுக்கப்படும் என்று உறுதியளித்தார்.

இதனூடாக இலங்கையால் எதிர்பார்க்கப்படும் உற்பத்தி மற்றும் பொருளாதார இலக்குகளையும் அடைந்துகொள்ள முடியும். இலங்கையில் நீண்டகால, நெருங்கிய நட்புறவு நாடாக இந்தியா இருந்து வருகின்றது. இந்நிலையில் தற்போது முதலீட்டுப்பேரவை மாநாட்டில் ஜனாதிபதியினால் விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்றுக்கொள்வதற்கும் இலங்கையுடன் மேலும் நெருக்கமான ஒன்றிணைந்து செயலாற்றுவதற்கும் இந்தியா தயாராக இருக்கின்றது.

உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட கொரோனா வைரஸ் பரவலின் காரணமாக அனைத்து நாடுகளும் பாரிய நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ள நிலையில், இவ்வாறானதொரு நேர்மறையான முயற்சி இன்றியமையாததாகும். ஏனெனில், நவீன தொழில்நுட்பத்தை அடிப்படையாகக்கொண்டு பல்வேறு துறைகள் சார்ந்தும், வெவ்வேறு நாடுகளைப் பங்காளிகளாக ஒன்றிணைந்து இயங்குவதன் மூலம் முன்னேற்றமடைவது என்பது கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் தற் காலத்தில் மிகவும் முக்கியமானதாகும்.

கொரோனா வைரஸ் பரவலால் ஏற்பட்ட நெருக்கடியின்போதும் கூட, இரு நாடுகளுக்கும் இடையிலான வணிக வெளிப்பாய்ச்சல்கள் நிலைத்த மட்டத்தில் பேணப்பட்டமையானது இந்தியா மற்றும் இலங்கைக்கு இடையிலான வலுவான வணிகத்தொடர்புகளை எடுத்துக் காட்டுகின்றது. இலங்கையின் தேசிய வர்த்தகக்கொள்கையானது இரு நாடுகளுக்கும் இடையிலான வணிகத்தொடர்புகளை மேலும் ஊக்குவிக்கும் வகையில் அமையும் என்று நம்புகின்றோம் என்றார். மேலும், இலங்கையின் சுபீட்சத்திற்கான ஒத்துழைப்பை வழங்குவதற்குத் தயாராக இருக்கும் அதேவேளை, எமது பொதுவான கடற்பிராந்தியத்தைப் பாதுகாப்பதற்கு அவசியமான கட்டமைப்புக்களையும் ஒன்றிணைந்து உருவாக்குவது அவசியமாகும் என்றும் குறிப்பிட்டார். (ஐ)

# சீனாவில் இருந்து மேலும் பத்து இலட்சம் 'சினோபார்ம்' தடுப்பூசிகள் இலங்கைக்கு

கொழும்பு, ஜூன் 10

சீனாவில் இருந்து மேலும் பத்து இலட்சம் "சினோபார்ம்" கொரோனாத் தடுப்பூசிகள் இலங்கை வந்தடைந்தன.

ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனத்துக்குச் சொந்தமான விசேட விமானத்தின் மூலம் நேற்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தை அவை வந்தடைந்தன என்று இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமண தெரிவித்துள்ளார்.

விமான நிலையத்தில் இருந்து தடுப்பூசிகள் இலங்கை மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் விசேட வாகனங்களின் மூலம் கொழும்பிலுள்ள களஞ்சியத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளன என்றும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய இதுவரை 31 இலட்சம் "சினோபார்ம்" தடுப்பூசி மாத்திரைகள் இலங்கைக்குக் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதேவேளை, ரஷ்யாவில் தயாரிக்கப்படும் 65 ஆயிரம் "ஸ்புட்னிக் - 5" தடுப்பூசிகள் எதிர்வரும் 11ஆம் திகதி இலங்கைக்குக் கொண்டு வரப்படவுள்ளன என்றும் இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமண மேலும் தெரிவித்துள்ளார். (இ)



# பாடசாலை மாணவர்கள் இலவசமாக பயன்படுத்தக்கூடிய மென்பொருள்

விரைவில் அறிமுகம் என்கிறார் நாமல்



பாடசாலை மாணவர்கள் வீட்டிலிருந்து இணையவழியூடாக கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இலவசமாக பயன்படுத்தக்கூடிய மென்பொருள் ஒன்றை எதிர்வரும் சில வாரங்களில் அறிமுகப்படுத்தவுள்ளதாக டிஜிற்றல் தொழில்நுட்பம் மற்றும் நிறுவன மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இந்த புதிய மென்பொருளானது, நிகழ்நிலை (Zoom) மென்பொருளைப் போன்றது என்றும், இலங்கையின் தகவல் தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு ஆகியவற்றுடன் இணைந்து இந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது என்றும் அவர் கூறினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம், நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே நாமல் ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்தார். (இ)

# பிறந்தநாள் கொண்டாடிய பத்து பேர் சிக்கினார்கள்



கொழும்பு, ஜூன் 10

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி கெஸ்பேவ பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றில் பிறந்தநாள் கொண்டாடிய 10 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இவர்களுள் 5 பெண்களும் உள்ளடங்குகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கைது செய்யப்பட்டவர்கள் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர் என்றும் பொலிஸ் பேச்சாளர் மேலும் கூறினார். (இ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 10.06.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**DAN தமிழ் ஒளி**

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து வழங்குபவர்: உளவள துனையாளர் திரு.நா.நவராஜ்
7.15 மணி : கதைவழி அறமொழி வழங்குபவர் : பண்டிதர் திருநாவுக்கரசு



7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ (மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : நலம்தானா-மறுஒளிபரப்பு
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-காஞ்சனா-02,இசை திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : வெள்ளித்திரை - திரை விமர்சனம்-மலேசியா ரூ அம்னீசியா




**இரவு**
7.00 மணி : சமையல் சமையல்
7.30 மணி : வெள்ளிடை நுட்பம்-தொழிநுட்பம் சார்ந்த புதிய நிகழ்ச்சி




8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : மாதம் ஒரு இசைக்குழு-இசைக்குழுக்களுக்கான போட்டி நிகழ்ச்சி (மறுஒளிபரப்பு)



10.00 மணி : நேருக்கு நேர்-அரசியல் நிகழ்ச்சி

**DAN COMEDY HD**

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் சந்தானம் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**DAN MUSIC HD**

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**கல்வி tv CHANNEL-1**

**காலை**
5.15 மணி - தரம் 06 தமிழ்
6.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
6.45 மணி - தரம் 08 கணிதம்
7.30 மணி - தரம் 09 வரலாறு
8.15 மணி - தரம் 10 விஞ்ஞானம்
9.00 மணி - க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) தமிழ்
10.00 மணி - பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி - க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப்பிரிவு) கணிதம்
12.00 மணி - தரம் 06 தமிழ்

**பகல்**
1.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
2.00 மணி - தரம் 08 கணிதம்
3.00 மணி - க.பொ.த சாதாரண தரம் விவசாயம்
3.40 மணி - க.பொ.த சாதாரண தரம் கத்தோலிக்கம்
4.20 மணி - க.பொ.த சாதாரண தரம் ஆங்கிலம்
5.00 மணி - க.பொ.த சாதாரண தரம் கணிதம்
5.40 மணி - க.பொ.த சாதாரண தரம் தகவல் தொழில்நுட்பம்
6.20 மணி - க.பொ.த சாதாரண மாதிரி வினாத்தாள்
7.00 மணி - க.பொ.த சாதாரண மாதிரி வினாத்தாள்

**சக்தி டிவி**

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

**CHANNEL HOLY MARY**

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்சிந்தனை
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
05.40 மணி : பாஷையூர் அந்தோனியார் நவநாள் திருப்பலி (நேரலை)

**Pirai Television**

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
12.00 மணி : லுகர் அதான்

**பகல்**
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
7.00 மணி : பிறை பிரசங்கம்

**இரவு**
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு
8.30 மணி : மனதோடு பேசலாம்